விலை ரூபா 1-00 ★

# ஈழநாடு
THE EELANADU

மலர் 24 புரட்டாதி 18 ஜுலைகஜ் 16 இதழ் 233

யாழ்ப்பாணம் திங்கட்கிழமை 4—10—82

BOND INSTITUTES
யாழ்ப்பாணம்
A/L புதிய வகுப்புகள்
(விஞ்ஞானம் – வர்த்தகம் – கலை)
✶ பகல் நேர
✶ காலை மாலை நேர
✶ வாரஇறுதி வகுப்புகள்
ஆரம்பம்: 9 - 10 - 82
(விடுதிவசதி உண்டு)
போன்: 24258 தந்தி: BOND
4694

# மகாவலி யாழ். வராது

## எதனையும் எதிர்த்துப் பெறமுடியாது!

## சுன்னாகம் கூட்டத்தில் ஜனாதிபதி

### துப்பாக்கிகளை கைவிடுமாறு இளைஞர்களுக்குக் கோரிக்கை

[நமது நிருபர் ஏ. வி. மாணிக்கம்]

"மகாவலி நீரை யாழ். மாவட்டத்துக்குக் கொண்டுவர முடியாது. ஆனால் மகாவலி நீர்த்திட்டம்மூலம் மின்சாரம் வந்துசேரும். சுன்னாகத்திலுள்ள மின்சார நிலையத்தின் மின்சக்தி இங்கு போதாமலிருப்பதால் அதை மேலும் விருத்தி செய்வதற்கு உலக வங்கியிடமிருந்து 20 லட்சம் ரூபா கடனைப் பெற்று ஒதுக்கியுள்ளோம்."

இவ்வாறு சுன்னாகம் சந்தை மைதானத்தில் நேற்றுக்காலை நடைபெற்ற ஜனாதிபதி தேர்தல் பிரசாரக் கூட்டத்தில் ஜனாதிபதி திரு. ஜே. ஆர். ஜெயவர்த்தன தெரிவித்தார்.

ஐக்கிய தேசியக் கட்சியின் மானிப்பாய்த்தொகுதி அமைப்பாளர்களில் ஒருவரான திரு. சபா. சின்னத்தம்பி தலைமையில் இக்கூட்டம் நடைபெற்றது.

கூட்டம் ஆரம்பமாவதற்கு முன்னர் ஜனாதிபதி யாழ். [கி]ங்ஸ் ஹவுஸிலிருந்து ஹெலிகொப்டரில் மெய்ப்பாதுகாவலர் சகிதம் சுன்னாகம் ஸ்கந்தவரோதயக்கல்லூரி மைதானத்தில் வந்திறங்கி, பொலிஸ் அதிகாரிகள் மற்றும் முப்படை அதிகாரிகளின் பாதுகாப்புடன் காரில் பவனியாகக் கூட்ட மைதானத்திற்கு வந்துசேர்ந்தார். சிகரசோடனைகளால் அலங்கரிக்கப்பட்ட மேடையில் ஜனாதிபதி ஏறியதும் இரு பெண்கள் தமிழ் முறைப்படி ஆராத்தி எடுத்தனர். ஆதரவாளர்கள் மாலை போட வந்த பொழுது ஜனாதிபதி அவற்றை கையில் வாங்கிக்கொண்டார்

பலத்த பாதுகாப்பையும் மீறி ஒருவர் மேடையில் ஏறித் தமது நிலைமை குறித்து ஜனாதிபதிக்கு சொல்லி ஒரு கடிதத்தையும் அவரிடம் கையளித்தார் பின்னர் அவர் பொலிஸ் அதிகாரியால் மேடையிலிருந்து கீழேகொண்டுவரப்பட்டு வெளியேற்றப்பட்டார்

யாழ் மாவட்ட அமைச்சர் திரு. யு. பி. விஜயக்கோன், கடற்றொழில் அமைச்சர் திரு. பெஸ்டஸ் பெரேரா, மற்றும் ஐக்கிய தேசியக் கட்சிப் பிரமுகர்கள் மேடையில் இருந்தனர்.

### யாரும் என்னை அழைக்கவில்லை

திரு. ஜெயவர்த்தன தொடர்ந்து பேசுகையில், இரத்தினபுரியில் நடைபெற்ற வன்முறை அழிவுச் செயல்களை பார்வையிட்ட நான் ஏன் யாழ்ப்பாணத்தில் நடைபெற்ற வன்முறைச்சம்பவங்களைப் பார்க்கவரவில்லை என்று கேட்டதாக அறிந்தேன். யாழ்ப்பாணத்தில் சில பிரச்னைகள் அப்பொழுது ஏற்பட்டிருந்தாலும் கூட யாழ்ப்பாணத்து மக்களாகிய நீங்களும்

(8ம் பக்கம் பார்க்க)

## "யாழ். மாவட்டத்தில் 99.5 வீதமானவர்கள் சமாதானத்தை விரும்புகின்றனர்"!

### காங்கேசன்துறையில் ஜனாதிபதி

[மாவிட்டபுரம் நிருபர் ஞா. இராமநாதன்]

யாழ். மாவட்ட மக்களில் 99.5 வீதமானவர்கள் சமாதானத்தை விரும்புகிறார்கள். ஒரு சிறு தொகையினரே அதற்கு எதிராக செயல்படுகிறார்கள் உலகம் முழுவதும் இப்படியான நிலைமை உண்டு. ஆனால் மக்களது வாக்குரிமையை எவராலும் தடுத்துவிடமுடியாது. உங்களுக்கு வாக்களிப்பதற்கு பாதுகாப்பு தேவையானால் நான் அளிக்கத்தயாராக உள்ளேன்.

சகல மக்களுக்கும் வேண்டிய உதவியளித்து சம அந்தஸ்துடன் வாழ வழிவகுப்பதே எமது நோக்கம். இந்த வகையில் 1977ம்ஆண்டு முதல் சகல மக்களுக்கும் நன்மை பயக்கக் கூடியதாக திட்டங்களைச் செயற்படுத்தி வந்துள்ளோம்.

(8-ம் பக்கம் பார்க்க)

## "டேவிற்சனை உடன் விடுதலை செய்க!"

### மக்கள் வி.மு. கோரிக்கை

[யாழ்ப்பாணம்]

டேவிற்சனையும் இளைஞர்களையும் விடுதலை செய்யுமாறு மக்கள் விடுதலை முன்னணி கோரிக்கை விடுத்துள்ளது,

"ஈழமாணவர் பொதுமன்றத் தலைவர் டேவிற்சன் துண்டுப்பிரசுரம் விநியோகித்ததாக கூறி கைது செய்யப்பட்டு அநுராதபுர முகாமில் தடுத்து வைப்பதை மக்கள் விடுதலை முன்னணி வன்மையாகக் கண்டிக்கிறது.

"இது பிரசுர சுதந்திரத்தில் முதலாளித்துவ அரசு ஜனநாயகத்துக்கெதிராக தலையிடும் ஓர் அப்பட்டமான சர்வாதிகாரச் செயலாகும்.

"மூலகாரணமான பயங்கரவாத தடைச்சட்டத்தை நீக்குவதுடன் டேவிற்சனையும் மற்றும் இது தொடர்பாக கைது செய்யப்பட்ட ஏனைய இளைஞர்களையும் விடுதலை செய்யுமாறு அரசைவலியுறுத்துகின்றோம்" என்று ம. வி முன்னணி சார்பில் திரு. இ. [லி]ங்கமாப்பாணர் விடுத்துள்ள அறிக்கையில்கோரியுள்ளார்.

## குட்டிமணி, ஜெகனை விடுதலைசெய்க!

### ஜனாதிபதியிடம் கோரிக்கை,

[மாவிட்டபுரம்]

"மரணதண்டனை விதிக்கப்பட்டுள்ள குட்டிமணி, ஜெகன் ஆகியோருக்கு மரணதண்டனையை ரத்துச்செய்து விடுதலை அளிக்கவேண்டும்".

இவ்வாறு ஜனாதிபதி ஜே. ஆர். ஜெயவர்த்தனவிடம் கோரிக்கை சமர்ப்பிக்கப்பட்டுள்ளது.

காங்கேசன்துறையில் நடைபெற்ற பிரசாரக்கூட்டத்திற்கு வந்திருந்தபோதே இக் கோரிக்கை விடுக்கப்பட்டது

காங்கேசன்துறை பட்டினசபை முன்னாள் தலைவரும், வர்த்தகப்பிரமுகருமான திரு. சு. ஜெயபாலசிங்கம் ஜனாதிபதியிடம் இக்கோரிக்கையைச்

[8-ம் பக்கம் பார்க்க]

## 5 இளைஞர்கள் கைது

[யாழ்ப்பாணம்]

யாழ். நகரில் ரோந்து சுற்றி வந்த இராணுவத்தினர் சந்தேகத்தின் மீது ஐந்து இளைஞர்களை கைதுசெய்துள்ளனர்.

தொல்புரத்தைச் சேர்ந்த இளைஞர் ஒருவருடன் மற்றும் சந்திரசேகரம், சிறீதரன், வசந்தகுமார், [ப]ரமநாதன் ஆகியோரே கைது செய்யப்பட்டவர்களாவர்.

இவர்கள் யாழ் பஜாரில் நேற்றுமுன்தினம் பிற்பகல் நின்றபொழுதே கைதுசெய்யப்பட்டனராம்.

இளைஞர்கள் கைதுசெய்யப்பட்டது சம்பந்தமாக யாழ். எம். பி. திரு. வெ. யோகேஸ்வரன் குருநகர் இராணுவ முகாமைச் சேர்ந்த அதிகாரிகளுடன் தொடர்புகொண்டபோது விசாரணையின்பின்னர் அவர்களை விடுதலை செய்வதாகத் தெரிவித்தனர்

தற்போது இவ்விளைஞர்கள் யாழ். பொலிசாரிடம் விசாரணைக்காக ஒப்படைக்கப்பட்டுள்ளதாகத் தெரியவருகிறது.

(மா]

## குண்டுவீச்சு சம்பவங்கள்

(யாழ்ப்பாணம்)

யாழ். நகரில் நேற்று முன் தினமிரவு அடுத்தடுத்து இரு இடங்களில் கைக்குண்டுவீச்சு சம்பவங்கள் நிகழ்ந்துள்ளன.

நேற்றுமுன்தினம் இரவு சுமார் எட்டுமணியளவில் யாழ். ஆஸ்பத்திரி வீதியிலும், நாவலர் வீதியிலும் இக் கைக்குண்டுகள் வீசப்பட்டதாகத் தெரிவிக்கப்பட்டது.

இக் கைக்குண்டு வீச்சு சம்பவங்களினால் எவ்விதசேதமும் ஏற்படவில்லையென்று தெரியவருகிறது. மா]

## பார்சல் புரளி ஒரு தொடர்கதை

பண்டத்தரிப்பு)

பண்டத்தரிப்பு தபால்நிலைய கட்டடத்தில் வைக்கப்பட்ட மர்மப் பார்சல் நேற்றுமுன் தினம் இராணுவத்தினர்மூலம்

[8ம் பக்கம் பார்க்க]

### மேல் நீதிமன்றத்தில்

## குட்டிமணி, ஜெகன், ஸ்ரீகுமார் இன்று ஆஜர்

(கொழும்பு)

குட்டிமணி, ஜெகன், ஸ்ரீகுமார் ஆகிய மூவரும் இன்று மேல் நீதிமன்றத்தில் ஆஜர் செய்யப்படுவார்கள்.

குட்டிமணியும், ஜெகனும் வெலிகடை சிறையில் உள்ளனர் ஸ்ரீகுமார் பனாகொடை இராணுவ முகாமில் காவலில் இருக்கிறார்.

1970ம் ஆண்டு பெப்ரவரி மாதம் முதலாம் திகதி கொலை செய்யப்பட்ட கான்ஸ்டபிள் ஞானசம்பந்தர் கொலைவழக்கு சம்பந்தமாகவே மேற்படி மூவரும் இன்று மேல் நீதிமன்றத்தில் ஆஜர் செய்யப்படுகின்றார்கள், குற்றப்பத்திரிகை இன்று தாக்கல் செய்யப்படும் என்று தெரியவருகிறது

[இ]

## தமிழில் அர்ச்சனை

சென்னை அக், 3

தமிழ்நாட்டிலுள்ள ஆலயங்களில் தமிழில் அர்ச்சனைகள் நடத்தப்படவேண்டுமென்று சேலம் மாவட்டத்தில் நடைபெற்ற தமிழ்நாடு காந்தி காமராஜ் காங்கிரஸ் கட்சியின் மகாநாட்டில் தீர்மானிக்கப்பட்டுள்ளது. [வெ]

# வரி விளம்பரம்

## வகுப்புகள்

மனையியல், Cake making, Icing ard Structure, Scientfic cutting, சிகை அலங்காரம் புதிய வகுப்புகள் ஆரம்பமாகி நடைபெறுகின்றன. சில வெற்றிடங்களே உண்டு. உடன் விண்ணப்பிக்க ''விம்ஸ்'' 14, மணிக்கூட்டு வீதி, யாழ்ப்பாணம். 4727

## தேவை

யாழ். நகரில் உள்ள பிரபல ஸ்தாபனத்திற்கு நல்ல ஆங்கில, ஆங்கில தட்டெழுத்து அறிவுள்ள பெண் உதவியாளர் உடன் தேவை. தகமை விபரங்களுடன் விண்ணப்பிக்கவும் விளம்பர இல: 4725 C/o ஈழநாடு லிமிட், யாழ்ப்பாணம் 4725

யாழ். நகரில் உள்ள பிரபல பெண்கள் தையல் நிலையத்திற்கு கட்டிங் மற்றும் தையல் அனுபவம் உள்ள பெண்கள் உடனடியாகத் தேவை. விண்ணப்பிக்கவும் விளம்பர இல, 4726 C/o, ஈழநாடு லிமிட். யாழ்ப்பாணம். 4726

யாழ்ப்பாணத்தில் பிரபல வர்த்தக நிறுவனமொன்றிற்கு ஐந்து வருடத்திற்கு மேல் வியாபார அனுபவமுள்ள கவுண்டர் கிளார்க்ஸ் (Counter Clerks) உடனடியாகத்தேவை. இவர் ஆங்கில அறிவு உடையவராயு ( கல்விப் பொதுத் தராதரப் (சாதாரணம்) பரீட்சையில் சித்திபெற்றவராயும், நல்ல எழுத்து எழுதக்கூடியவராயும், நாற்பது வயது குக் குறைந்தவராயும் நம்பிக்கைக் குரியவராயும் இருத்தல்வேண்டும். தகுதி உள்ளவர்கள் முழு விபரங்களுடனும் எதிர்பார்க்கும் சம்பளத்துடனும் 12-10-82 முன் விண்ணப்பிக்கவும். விளம்பர இல: 4728 மே/பா. ஈழநாடு, யாழ்ப்பாணம். 4728

## விற்பனைக்கு

யாழ்ப்பாணம் மாட்டீன் ஒழுங்கையில் 37ம் நம்பர் இலக்கத்தில் 1 பரப்பு காணி விற்பனைக்கு உண்டு விபரங்களுக்கு: யஸ்ரீன் பஸ்தியாம்பிள்ளை 9/6, நந்தாவனம் ஒழுங்கை, வேம்படி றோட், யாழ்ப்பாணம் என்ற முகவரிக்கு நேரிலோ, கடிதமூலமோ தொடர்பு கொள்ளவும். 4718

சிறந்தரக இத்தாலியன் மொடல். 10 அடிகியூப் அளவுள்ள குளிர்சாதனப்பெட்டி [INDESIT] ஒன்றும், மொடல் இல. SA 270 S, Technic - 4 பான்ட் ஸ்ரீயோ கசற் றேடியோ ஒன்றும் விற்பனைக்குண்டு தொடர்புகொள்க: P S. சிவகுமார், காங்கேசன் துறை வீதி, மாவிட்டபுரம், தெல்லிப்பழை. 4729

புனரமைக்கப்பெற்ற C. 90, C 50, C. 70 மோட்டார் சைக்கிள்களும் DELICA வான்களும் விற்பனைக்குண்டு. மற்றும் எந்தவிதமான வாகனங்களும் குறைந்த விலையில் ஆடருக்கு நேரடியாகத் தருவித்துக் கொடுப்போம். நா. சாம்பசிவம் அன் கோ. 54 கஸ்தூரியார் வீதி யாழ்ப்பாணம். 4563

**வியாபாரம் பெருக விளம்பரம் செய்க**

# சரவணை கொலை வழக்கு: எதிரிகள் விடுதலை

ஊர்காவற்றுறை)

சரவணை கொலை வழக்கில் எதிரிகள் விடுதலை செய்யப்பட்டனர், இவ்வழக்கு ஊர்காவற்றுறை நீதிமன்றத்தில் நீதிபதி ரி கே என் திலகன் முன்னிலையில் நடைபெற்றது.

இவ்வழக்கில் சரவணையில் 82 பெப்ரவரியில் வடக்கு நாரந்தனையைச் சேர்ந்த செல்லன் மனோரஞ்சிதம், மருத்தீன் இர சு என்பவர்கள் கனகசபை செல்லையாவை கொலை செய்ததாக குற்றம் சாட்டப்பட்டிருந்தது. போதிய சாட்சிகள் இல்லமையினால் ஊர்காவற்றுறை மாவட்ட நீதிபதி எதிரிகளை விடுதலை செய்தார்.

இறந்த செல்லையாவின் நகல்களைக் கவனிப்பதற்காகசட்டத்தரணி ஜிம்மி இராசரத்தினம் சட்டத்தரணி ஜெயராசசிங்கத்தின் அனுசரணையுடன் ஆஜரானார். எதிரிகளின் சார்பில் சட்டத்தரணி ந. ஸ்ரீகாந்தா சட்டத்தரணி செல்வி தேவி இராயப்புவின் அனுசரணையுடன் ஆஜரானார், (க)

# ''அபிவிருத்திவேலைகளுக்கு பணம் ஒதுக்கியும் வேலைகள் நடைபெறவில்லை''

## உடுப்பிட்டி எம். பி. கவலை

(யாழ்ப்பாணம்)

''1983ம் ஆண்டுக்கான அபிவிருத்தி வேலைகளுக்குத் திட்டங்கள் தீட்டவுள்ளோம்; ஆனால் 1982ம் ஆண்டில் கல்வித் திணைக்களம், மின்சாரத் திணைக்களங்களில் நடைமுறைப்படுத்தப்பட வேண்டிய அபிவிருத்தி வேலைகளுக்கு பன்முகப்படுத்தப்பட்ட வரவுசெலவுத் திட்டத்தின் மூலம் நிதி ஒதுக்கியும், இதுவரை எதுவித வேலைகளும் ஆரம்பிக்கப்படவில்லை''

உடுப்பிட்டி எம்.பி.திரு.த. இராஜலிங்கம் யாழ். மாவட்ட அபிவிருத்திசபைக் கூட்டத்தில் பேசுகையில் மேற்கண்ட தகவலை வெளியிட்டார்,

யாழ். செயலக சபா மண்டபத்தில் அபிவிருத்தி சபைத் தலைவர் திரு.சு. நடராசா தலைமையில் மாதாந்தப் பொதுக் கூட்டம் நடைபெற்றது.

உடுப்பிட்டித் தொகுதியில் கல்வி-மின்சாரத் திணைக்களங்களுக்கு அதிக நிதி ஒதுக்கீடு செய்திருந்தும், 9 மாத காலமாகியும் எதுவித வேலைகளும் ஆரம்பிக்கப்படவில்லை என்று கவலை தெரிவித்த உடுப்பிட்டி எம். பி. திரு. இராஜலிங்கம்; இந்த வருடம் முடிவதற்குள் வேலைகளை ஆரம்பிக்கவேண்டும் என்று கேட்டுக்கொண்டார்.

திரு இராஜலிங்கத்தின் வேண்டுகோளை ஏற்றுக்கொண்ட அபிவிருத்திசபைத் தலைவர் திரு. சு நடராசா பதிலளித்துப் பேசுகையில் கூறியதாவது:-

''கல்வி, மின்சாரத் திணைக்களங்களின் அதிகாரிகளை அழைத்து நிறைவேற்றவேண்டிய அபிவிருத்தி வேலைகள் சம்பந்தமாக ஆலோசிக்கவிருக்கிறோம். அந்த உரையாடலில் அபிவிருத்திசபை உறுப்பினர்கள் அனைவரும் சமூகமளித்து தங்கள் பிரச்னைகளை எடுத்துச் சொல்லவேண்டும்'' என்றார்.

''பன்முகப்படுத்தப் பட்ட வரவு செலவுத் திட்ட நிதியில் இருந்து பாடசாலைகளுக்குத் தொலைக்காட்சிப் பெட்டிகள் வழங்குவது சார்பான கிளிநொச்சி தொகுதி எம் பி.யின் கோரிக்கை நிறைவேற்றுக் குழுவால் பரிசீலிக்கப்பட்டது.

மேற்படி விடயத்திற்கென அங்கீகரிக்கப்பட்ட அபிவிருத்தித் திட்டத்தில் எம்.பி.யினால் ஒதுக்கீடுகள் செய்யப்படவில்லையென திட்டமிடல் பிரதிப் பணிப்பாளர் அறிவித்துள்ளதால் கிளிநொச்சித் தொகுதியில் அபிவிருத்திக்கு ஏனைய எம். பி. க்கள் தமது நிதியிலிருந்து பகுதிக் கொடுப்பனவுகள் செய்துள்ளமையால், மூல அபிவிருத்தி திட்டத்தில் நிறைவேற்றுக் குழுவால் அங்கீகரிக்கப்படாத விடயங்களில் நீதிமாற்றம் செய்யும்போது ஏனைய எம். பிக்களையும் அபிவிருத்திசபை ஊடாக கலந்தாலோசிக்க வேண்டும் எனவும் இதனை அபிவிருத்திச்சபையின் எம். பிக்களின் தீர்மானத்துக்கு விடுவதெனவும் சபையில் தீர்மானிக்கப்பட்டுள்ளது.

கிளிநொச்சி எம். பி. திரு வீ. ஆனந்தசங்கரி ஜூலை 14ம் திகதியிலிருந்து மூன்று மாதங்களுக்கு லீவு வழங்கும்படி அனுமதிகேட்டுள்ளதாக, நல்லூர் எம் பி. திரு. எம். சிவசிதம்பரம் கொண்டுவந்த பிரேரணையை, திரு. ந. இராசேந்திரன் அனுவதிக்க சபை ஏகமனதாக ஏற்றுக்கொண்டது. [மா]

# வடமாநிலக் கல்விப் பணிப்பாளர் பாராட்டு

(புலோலி, கரவெட்டி)

உடுப்பிட்டி வட்டாரக் கல்வியதிகாரியின் அலுவலகம் முன்மாதியாகரித்திகழ்வதாகப் பாராட்டிய வடமாநிலக் கல்விப் பணிப்பாளர் திரு. எம். சிமியாம்பிள்ளை அதுபோல இக்கல்வி வட்டாரப் பாடசாலைகளின் அலுவலகங்களும் இருக்கும் என ஊகிப்பதாவும் குறிப்பிட்டார்.

வடமாநிலக் கல்விப் பணிப்பாளர் திரு. எம். சிமியாம்பிள்ளை உடுப்பிட்டி கல்வி வட்டார அதிபர்கள் கூட்டத்தில் கலந்துகொண்டு உரையாற்றுகையிலே மேற்கண்டவாறு குறிப்பிட்டார். இவ்வதிபர்கள் கூட்டம் நெல்லியடி மத்திய மகாவித்தியாலய மண்டபத்தில் வட்டாரக் கல்வியதிகாரி திரு. வீ. கே. ஈசுரபாதம் தலைமையில் நடைபெற்றது,

உடுப்பிட்டி அதிபர்கள் சங்க செயலாளரும் கரணவாய் பொன்னம்பல வித்தியாலய அதிபருமான திரு. சி. தாமோதரம், கல்வியதிகாரிகளான திரு. கே. பொன்னம்பலம், திரு. எஸ். தியாகராசா ஆகியோரும் கலந்துகொண்டனர்.

# சிரமதானம் மூலம் வீதி திருத்தம்

[சரவெட்டி]

கரவெட்டி சரஸ்வதி வித்தியாலயத்திற்கு முன்பாக மிகவும் சீர்கேடான நிலையில் இருந்த வீதியை கரவெட்டி இடைக்குறிச்சி கிராம அபிவிருத்திச் சங்கம் சிரமதானம் மூலம் திருத்திப் புனரமைப்புச் செய்தது திரு. க பொன்னு தலைமையில் நடைபெற்ற இச் சிரமதான வேலையில் பலர் கலந்து கொண்டனர்.

## இன்றும் நாளையும்

# நான்கு கல்லூரிகளின் மெய்வல்லுநர் போட்டிகள்

(அரியாலை)

வட்டுக்கோட்டை யாழ்ப்பாணக் கல்லூரி, பருத்தித்துறை ஹாட்லிக் கல்லூரி. யாழ்ப்பாணம் புனிதர் சம்பத்திரிசியார் கல்லூரி, புனிதர் யோவான் கல்லூரி ஆகிய கல்லூரிகளின் வருடாந்த மெய்வல்லுநர் போட்டி யாழ்ப்பாணக் கல்லூரி விளையாட்டரங்கில் இன்றும் நாளையும் நடைபெறவிருக்கின்றன.

இப்போட்டிகளில் 16, 17, 19 வயது வீரர்கள் கலந்து கொள்கிறார்கள் இப்போட்டிகளை இந்தநான்குகல்லூரிகளின் விளையாட்டுச் சங்கம் ஏற்பாடு செய்துள்ளது. (அ)

# அ. இ. பாடசாலைகள் மெய்வல்லுநர் போட்டிகள்

[அரியாலை]

கல்வியமைச்சினால் பாடசாலைகளுக்கிடையில் அகில இலங்கை ரீதியில் நடத்தப்படும் வருடாந்த மெய்வல்லுநர் போட்டி அநுராதபுரத்திலும் கொழும்பிலும் ஹோமகமையிலும் நடைபெறவிருக்கிறது

சிரேஷ்ட பிரிவில் ஆண்களுக்கான போட்டிகள் இம்மாதம் 15ம், 16ம், 17ம் திகதிகளில் அநுராதபுரத்திலும் கனிஷ்ட பிரிவில் ஆண்களுக்கான போட்டிகள் இதே நாட்களில் ஹோமகமையிலும் பெண்களுக்கான போட்டிகள் நவம்பர் 2ம், 3ம், 4ம் திகதிகளில் கொழும்பிலும் நடைபெற ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது.

# மணிலாவில் நடைபெறும் ஆசிய கூடைப்பந்தாட்டப் போட்டியில் யாழ். மாணவர்கள்

[அரியாலை]

மணிலாவில் நடைபெறவிருக்கும் ஆசிய கூடைப்பந்தாட்டப் போட்டியில் இலங்கைக் கோஷ்டியும் பங்குபற்றவிருக்கிறது.

இப்போட்டியில் கலந்துகொள்ளவிருக்கும் வீரர்களுக்கான பயிற்சி முகாமொன்றை நடாத்த அகில இலங்கைக் கூடைப்பந்தாட்டக் கோஷ்டி ஏற்பாடு செய்துள்ளது

கொழும்பில் நடைபெறவிருக்கும் இப்பயிற்சி வகுப்பில் கலந்து கொள்வதற்கு வடமாகாணத்தைச்சேர்ந்த யாழ். பரியோவான் கல்லூரியின் கூடைப்பந்தாட்டக் கோஷ்டியின் கப்டன் செல்வன் துஷ்யந்தனும் உபகப்டன் செல்வன் தம்புவும் இக்கோஷ்டியைச் சேர்ந்த செல்வன் பி. திருக்குமாரும் தெரிவுசெய்யப்பட்டுள்ளனர். (அ)

# தபாலகத்தில் தட்டுப்பாடு

[கரவெட்டி]

கரவெட்டித் தபாற் கந்தோரில் அஞ்சலக அடையாள அட்டையைப் பெறுவதற்கான விண்ணப்பப் படிவத்திற்குத் தட்டுப்பாடு ஏற்பட்டுள்ளதால் அஞ்சலக அடையாள அட்டை பெறுவதில் மாணவர்கள் பலர் கஷ்டம்அடைந்து வருகின்றனர்.

# பரி.யோவான் உதைபந்தாட்டக் கப்டன்கள்

[அரியாலை]

யாழ். பரி.யோவான் கல்லூரியின் உதைபந்தாட்டக் கோஷ்டிகளுக்குப் பின்வருவோர் கப்டன்களாகத் தெரிவு செய்யப்பட்டனர்,

முதலாம் பிரிவுக் கப்டனாக செல்வன் எஸ். விஜயாராகவனும் உதவிக் கப்டனாக செல்வன் எஸ் விக்னபாலனும் இரண்டாம் பிரிவுக்கப்டனாக செல்வன் எஸ். சத்தியமூர்த்தியும் உபகப்டனாக செல்வன் பி. காந்தனும் மூன்றும்பிரிவுக்கப்டனாக செல்வன் எஸ். பார்த்திபனும் உபகப்டனாக செல்வன் என். பகீரதனும் நியமிக்கப்பட்டுள்ளனர்.

[அ]

# உதைபந்தாட்டம்: இரு போட்டிகள்

[அரியாலை]

அரியாலை விளையாட்டுக்கழகத்திற்கும் யாழ். பரி.யோவான் கல்லூரிக்குமிடையில் நடைபெற்ற முதலாவது பிரிவினருக்கான உதைபந்தாட்டப் போட்டியில் பரி.யோவான் கல்லூரிக்கோஷ்டி 5-0 கோல்களால் வெற்றியீட்டியது. திரு. என். எஸ். தனபாலன் மத்தியஸ்தம் வகித்தார்.

இரண்டாம் பிரிவினருக்கான போட்டியில் அரியாலை விளையாட்டுக்கழகம் 1-0 கோலால் வெற்றியீட்டியது, திரு. வி. எக்ஸ். புஸ்பராசா மத்தியஸ்தம் வகித்தார்.

பாஷையூர் புனித அந்தோனியார் விளையாட்டுக்கழகத்திற்கும் பரியோவான் கல்லூரி 3ம் பிரிவினருக்குமிடையில் நடைபெற்ற போட்டியில் பரியோவான் கல்லூரிக் கோஷ்டி 2-0 கோல்களால் வெற்றியீட்டியது. திரு எஸ். அந்தோனிப்பிள்ளை மத்தியஸ்தம் வகித்தார்.

போட்டிகள் பரியோவான் கல்லூரி மைதானத்தில் நடைபெற்றது. [அ]

# நஞ்சருந்தி தற்கொலை

[மாவிட்டபுரம்]

பொறுப்பில்லாமல் திரிந்ததனையனை தந்தை கண்டித்தது விபரீதமாகியது. 19 வயதான அந்த இளைஞர் நஞ்சருந்தி மரணமானார்

மயிலிட்டி தெற்கைச்சேர்ந்த தம்பிராஜா சிவபாலன் என்பவரே இவ்வாறு தற்கொலை செய்துகொண்டவராவார்.

சுருட்டுத்தொழில் செய்து வந்த இவர் 2 மாதங்களாக வீட்டில் பணம்எதுவும்கொடுக்காது சிநேகிதர்களுடன் சேர்ந்து ஊர்சுற்றி வந்ததாகவும், அத்துடன் இவருக்கு காதல் விவகாரம் ஒன்று உண்டென்றும், இவை தொடர்பாக தந்தையார் இவரைக் கண்டிக்கவே நஞ்சருந்தி மரணமானதாகவும் விசாரணையில் தெரியவந்தது

திடீர் மரணவிசாரணை அதிகாரி திரு. நா. தம்பிராஜா விசாரணை நடத்தி தற்கொலை எனத்தீர்ப்பளித்தார்.

காங்கேசன்துறை பொலிஸ் கான்ஸ்டபிள் திரு. சி. நல்லையா விசாரணைக்கான ஏற்பாடுகளை செய்திருந்தார்.

# ஈரான் - ஈராக் போருக்கு அமைதித்தீர்வுகாணமுயற்சி

## ஐ. நா. பந்தோபஸ்து சபை நாளை கூடும்

நியூயோர்க், அக் 3

ஈரானுக்கும், ஈராக்குக்கும் மீண்டும் ஏற்பட்டுள்ள போருக்கு அமைதித் தீர்வுகாண்பதற்கு ஐ. நா. சபையின் மண்டல சார்பற்ற 4 நாடுகள் குழு ஒன்று அமைக்கப்பட்டுள்ளது.

மீண்டும் தாக்குதல்கள் இடம்பெற்றதைத் தொடர்ந்தே இந்த நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாக அறிவிக்கப்பட்டுள்ளது.

பாரதப் பிரதிநிதி திரு. நரசிம்மராவ் இக்குழுகூட்டத்தில் பேசுகையில, தாக்குதல்களினால் இரு நாடுகளும் பலவீனமடையும் என்று தெரிவித்தார்.

இப்பிரச்னை குறித்து ஆராய ஐ நா. பந்தோபஸ்துசபையும் நாளை கூடவிருக்கிறது.

2 பெரிய ஈரான் படைக் கப்பல்களை அழித்துவிட்டதாக ஈராக் அறிவித்துள்ளது. தொடர்ந்து தாக்குதல்கள் நடைபெற்றுவருவதாகவும் கூறப்படுகிறது. [க]

# டேவிட்சன் கைதுக்கு ஆட்சேபனை

(யாழ்ப்பாணம்)

ஈழமாணவர் பொதுமன்றத் தலைவர் திரு. மு டேவிட்சன் கைதுசெய்யப்பட்டமை குறித்து இனங்களுக்கிடையே நீதிக்கும் சமதத்துவத்திற்குமான இயக்கத்தின் யாழ்ப்பாணக்கிளை தனது ஆட்சேபனையைத் தெரிவித்துள்ளது,

இவ் இயக்கம் டேவிட்சன் கைது செய்யப்பட்ட முறையை குறித்தும் அவர் தொடர்ந்து நீதிமன்றத்தில் விசாரணைக்குட் படுத்தப்படாமல் தடுப்புக்காவலில் வைக்கப்பட்டுள்ளமையையும் கண்டித்துள்ளது.

டேவிட்சன் உடனடியாக விடுதலை செய்யப்பட வேண்டும் அல்லது நீதிமன்றத்தில் ஆஜராக்கப்பட வேண்டுமென்றுப் இவ் இயக்கம் வேண்டுகோள் விடுத்துள்ளது

பயங்கரவாத தடுப்புச் சட்டம் வாபஸ் பெறப்பட வேண்டுமென்பதை இனங்களுக்கிடையே நீதிக்கும் சமத்துவத்திற்குமான யக்கம் தொடர்ந்தும் வற்புறுத்தியுள்ளது.

இச்சட்டத்தின் கீழ் தொடர்ந்து ஏற்படும் மனித உரிமை மீறல்களை நிறுத்த வேண்டுமென்பதையும் இவ் இயக்கம் மீண்டும் வற்புறுத்தியுள்ளது. [வெ]

# 700 கொத்தடிமை தொழிலாளர் குடும்பங்களுக்கு விடுதலை!

## 20 வருடங்களாக கல்லுடைத்தனராம்!

சென்னை, அக். 3

விஜயவாடாவில் கொத்தடிமைகளாக வாழ்ந்த சுமார் 700 கல்லுடைக்கும தொழிலாளர் குடும்பங்கள் விடுதலை பெற்று சென்னை வந்துசேர்ந்து இங்கிருந்து தங்கள் கிராமங்களுக்குச் சென்றனர்.

சேலத்தைச் சேர்ந்த இவர்கள் சுமார் 20 வருட காலத்திற்கு மேலாக ஒப்பந்த அடிப்படையில் கல்லுடைக்கும் தொழிலில் ஈடுபட்டுவர்தனராம்.

ஆண்கள், பெண்கள், குழந்தைகள் உட்பட சுமார் 700 குடும்பங்கள் நேற்று சென்னை வந்து சேர்ந்தனர் விஜயவாடாவிலிருந்து சேலத்திற்கு செல்லும், ரயில் பிரயாணச் செலவை ஆந்திரஅரசு வழங்கியது.

3 வயதிற்குட்பட்ட சுமார் 100 குழந்தைகளும் இவர்களுடன் வந்திருந்தனர். [க]

# ஸ்பெயினில்மூன்று ராணுவ அதிகாரிகள் கைது!

லண்டன், அக். 3

ஸ்பெயினில் சதிசெய்ததாக 3 இராணுவ உயர் அதிகாரிகள் கைதுசெய்யப்பட்டுள்ளனர்.

தேசிய பாதுகாப்புக்கு இவர்கள் பங்கம் விளைவிக்கத்திட்டமிட்டிருந்தார்கள் என்று குற்றம்சாட்டப்பட்டுள்ளது.

இம்மாதம் 28ம்தேதி ஸ்பெயினில் பொதுத்தேர்தல் நடைபெறவிருக்கிறது.

ஆளும் கட்சியான நடுநிலைக் கட்சியை, சோஷலிஸ்ட் கட்சி தேர்தலில் தோற்கடித்துவிடும் எனக்கூறப்படுகிறது. [க]

# ரூ. 27,000 நகை மோசடி: கட்டளை அனுப்ப உத்தரவு

(மாவிட்டபுரம்]

27 ஆயிரம் ரூபா நகை மோசடி தொடர்பாக நபர் ஒருவர் மீது தொடரப்பட்ட வழக்கில் அந்நபருக்கு கட்டளை அனுப்ப உத்தரவிட்ட மல்லாகம் நீதிபதி விசாரணையை ஒத்திவைத்தார்.

காங்கேசன் துறையைச் சேர்ந்த சின்னத்தம்பி முருகையா என்பவரிடமிருந்து 27 ஆயிரம் ரூபா பெறுமதியான சங்கிலி, காப்பு, தங்கப் பதக்கம் என்பவற்றைப் பெற்று வங்கியில் அடைவு வைத்து 10,800 ரூபாவை வழங்கிய அதேயிடத்தைச் சேர்ந்த நவரத்தினம் கணேசபிள்ளை என்பவர் பின்னர் வங்கியில் நகைகளை மீட்பதற்காக சின்னத்தம்பி முருகையாவினால் பணம் வழங்கப்பட்டபோதும் வங்கியிலிருந்து நகைகளை எடுத்துக் கொடுக்காது ஏமாற்று மோசடி செய்ததாக இவ்வழக்கில் குற்றம் சுமத்தப்பட்டுள்ளது.

சட்டத்தரணி ஆர். ஜே. செல்வரத்தினம், சட்டத்தரணி செல்வி மாலினி இராஜரத்தினம் ஆகியோர் மனுதார் சார்பில் இவ்வழக்கை தாக்கல் செய்தனர்.

நீதிபதி திரு. சீ. வி. விக்னேஸ்வரன் மேற்படி நபருக்கு கட்டளைஅனுப்ப உத்தரவிட்டு விசாரணையை இம்மாதம் 25ம் திகதிக்கு ஒத்திவைத்தார்.

# புதிய தலைவரை சந்தித்தனர்

சென்னை அக் 3.

காமராஜ் பவனிலிருந்து தமிழ்நாடு காங்கிரஸ் இயங்கும் என்று தமிழ்நாடு காங்கிரஸ் புதிய தலைவி திருமதி மரகதம் சந்திரசேகர் நேற்று தெரிவித்தார்.

நாட்டில் பல பகுதிகளிலிருந்தும் பெருந்திரளான காங்கிரஸ் ஆதரவாளர்கள் அவரைச்சந்தித்தனர். காங்கிரஸ் எதிர்காலம் பற்றியும் ஆராய்ந்தனர். முன்னாள் அமைச்சர் திரு பக்தவச்சலத்தையும் திருமதி மரகதம் சந்திரசேகர் சந்தித்து ஆலோசனை நடத்தினர். [க]

# சிறிய கார்கள் உற்பத்தி

டோக்கியோ, அக். 3

ஜப்பானின் உதவியுடன் இந்திய மாருதி மோட்டார் உற்பத்தி நிறுவனம் சிறிய கார்களை உர்பத்தி செய்யவிருக்கிறது.

தற்பொழுது 2 வகை கார்கள் மட்டுமே இந்தியாவில் உற்பத்தி செய்யப்பட்டு வருகிறது புதிய திட்டத்தின்படி யப்பான் உதவியுடன் இந்தியாவில் பாவிப்பதற்கான சிறிய கார்கள் உற்பத்தி செய்யப்படும். [க]

மட்டக்களப்பு

# பல்கலைக்கழக கல்லூரிக்கு பிரி. பல்கலைக்கழகம் உதவும்

லண்டன், அக். 3

இலங்கையிலுள்ள மட்டக்களப்பு பல்கலைக் கழக கல்லூரிக்கு. பிரிட்டன் சலுஸ் பல்கலைக் கழகம் பல வழிகளிலும் உதவியளிக்க முடிவுசெய்துள்ளது.

ரசாயன பேராசிரியர் திரு. டேவிட்வொல்டா, இதற்கான திட்டங்களை வகுக்க இலங்கை சென்றுள்ளார்.

100 மாணவர்கள் தங்குவதற்கான விடுதியொன்றும் வந்தாறுமூலை என்ற இடத்தில் அமைக்கப்படவிருக்கிறது. இதற்கென 900 ஏக்கர் காணி ஒதுக்கப்பட்டுள்ளது விரிவுரையாளரின் உதவியும் வழங்கப்படும். (க)

# "மலேசியா மாணவருக்கு 5 இடம்வேண்டும்"

சென்னை அக். 3

தமிழ்நாடு மருத்துவத் கல்லூரியில் மலேசியா தமிழ் மாணவர்களுக்கு ஐந்து இடங்களை ஒதுக்க வேணடும் என்று மலேசிய பொதுத்துறை அமைச்சர் திரு. சாமிவேலு கோரியுள்ளார்.

தமிழ் நாடு முதலமைச்சர் திரு. எம். ஜி. இராமச்சந்திரனைச் சந்தித்து இது பற்றி பேசவிருப்பதாசவும் அவர் தெரிவித்துள்ளார். (க)

இஸ்ரேல் பாதுகாப்பு அமைச்சரை

# ராஜினமா செய்யுமாறு ராணுவத்தினர் கோரிக்கை!

லண்டன், அக். 3

இஸ்ரேலிய பாதுகாப்பு அமைச்சர் திரு. கிரோனை ராஜினமாச் செய்யுமாறு இராணுவ தலைவர்களி கோரியுள்ளார்கள்.

பாலஸ்தீனரின் படுகொலைக்கு இஸ்ரேலிய இராணுவத்தினர்தான் காரணம் எனப் பாதுகாப்பு அமைச்சர் கூறியதே இதற்குக் காரணமாகும்.

கடந்த வாரம் நடந்த ரகசிய கூட்டமொன்றில் நூற்றுக்கு மேற்பட்ட இஸ்ரேலிய இராணுவத் தலைவர்கள் பாதுகாப்பு அமைச்சர் ராஜினமாவை வலியுறுத்தியுள்ளனர்.

இராணுவத்தினருக்கும், பாதுகாப்பு அமைச்சருக்குமிடையில் பரஸ்பரம் நம்பிக்கை குறைந்துவருவதாகக் கூறப்படுகின்றது. [க]

முன்னாள்

# நிதிஅமைச்சர் காலமானர்!

புதுடில்லி, அக். 3

முன்னாள் பாரத நிதிஅமைச்சர் திரு தேஷ்முக் காலமானர். 87 வயதான இவர் சிறிது காலம் சுகவீனமுற்றிருந்த பின்னர் நேற்று ஹைதராபாத்தில் காலமானர்.

இவர் திட்டக்கமிஷன் உறுப்பினராகவும், பல்கலைக் கழக நிதிகமிஷன் தலைவராகவும், கடமையாற்றியுள்ளார். இவருக்கு 'பத்ம விபுஷண்' பட்டம் வழங்கி அரசு கௌரவித்திருந்தது. (க)

# சிரியபடை வெளியேறும்

லண்டன், அக். 3

லெபனன் கேட்டுக்கொள்ளும் பட்சத்தில் சிரியா படைகள் திருப்பி அழைக்கப்படும் என்று அறிவிக்கப்பட்டுள்ளது.

லெபனனிலிருந்து சகல வெளிநாட்டுப் படைகளையும், திருப்பிஅழைக்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. (க)

# கோஷ்டி மோதல் இருவர் பலி

சென்னை, அக். 3

சென்னை அருகில் நேற்று நடந்த கோஷ்டி மோதலில் இருவர் பலியானர்கள். மற்றும் இருவர் படுகாயமடைந்தனர். [க]

# இந்திய ஜனதிபதி அமெரிக்க மருத்துவ மனையில் அனுமதி

வாஷிங்டன், அக். 3

இந்திய ஜனதிபதி திரு. ஸெயில்சிங் வைத்திய சிகிச்சைக்காக அமெரிக்க இருதய மருத்துவகழகத்தில் அனுமதிக்கப்பட்டுள்ளார்.

இந்திய ஜனதிபதி விரைவில் சிகிச்சைபெற்று குணமடைவார் என்ற செய்தியை அமெரிக்க ஜனதிபதி திரு. றேகன் அமெரிக்க வெளியுறவு அமைச்சர் மூலம் அவருக்கு அனுப்பி வைத்தார்.

டாக்டர்கள் விரைவில் நோயைக் கண்டறிந்து அதற்கான சிகிச்சையளிப்பார்கள என்றும் அச்செய்தியில் கூறப்பட்டுள்ளது.

அமெரிக்க ஜனதிபதிக்கும், அமெரிக்க மக்களுக்கும் இந்திய ஜனதிபதி ஸெயில்சிங் நன்றி தெரிவித்து பதில் அனுப்பியுள்ளார். (க)

# குண்டுவெடிப்பு 60 பேர் பலி

தெஹ்ரான், அக். 3

மத்திய தெஹ்ரானில் இடம் பெற்ற பெரும் குண்டுவெடிப்பு சம்பவமொன்றினல் 60 பேர் உயிரிழந்துள்ளதாகவும், பலர் காயமடைந்துள்ளதாகவும் அறிவிக்கப்பட்டது.

இச்சம்பவத்தினல் உயிரிழந்தவர்களின் எண்ணிக்கைபற்றி உத்தியோகபூர்வமாக எதுவும் தெரிவிக்கப்படவில்லை. 400 பேர் காயமடைந்ததாக அறிவிக்கப்பட்டது (வெ)

# பாடசாலைக்கு மாடிக்கட்டடம்

[கரவெட்டி]

கம்பர்மலை அ. த. க. பாடசாலையில் மாடிக் கட்டிடம் ஒன்று நிறுவப்படவுள்ளது. இம் மாடிக் கட்டிடத்தின் முதற்கட்ட வேலைகளுக்கென உடுப்பிட்டி எம். பி. திரு. த. இராசலிங்கம் ஒரு லட்சத்து ஆறுயிரம் ரூபாவை பன்முகப்படுத்தப்பட்ட வரவு செலவுத் திட்டத்தின் கீழ் ஒதுக்கீடு செய்துள்ளார்.

## மணிவாக்கு

மக்கள் நிலைக்குக் கீழே இறங்கிவரத் தெய்வம் துணிந்திருப்பதால் தெய்வ நிலைக்கு மேல் நோக்கிப் போக நாம் துணிவோமாக. —அருள்விருந்து

# நமது நோக்கு

## வெடிக்காத குண்டு

ஜனாதிபதி – ஜனாதிபதி வேட்பாளர், ஜெயவர்த்தனாவின் யாழ்ப்பாண விஜயம் எவ்வளவு பரபரப்பை ஏற்படுத்தியபோதும் சென்ற சனிக்கிழமையைப் போல அமைதியான நாள் நகரில் அண்மையில் காணப்படவில்லை.

புரட்டாதிச் சனியென்றபடியாலும் இந்த அமைதி ஏற்பட்டிருக்கலாம். கடந்த 26 வருடங்களாகத் தொடர்ந்து சனி விரதம் அனுட்டிக்கும் தமிழ் மக்கள் இன்றும் பொறுமை இழந்தவர்களல்ல.

எத்தனை இன்னல்களுக்கும் பொலிஸ் – ராணுவக் கரைச்சல்களுக்கும் வழிவிலகிப் பழகியவர்கள் ஜனாதிபதியின் யாழ்ப்பாண விஜயத்துக்கு ஏற்பாடான பிரமாண்டமான பாதுகாப்பு நடவடிக்கைகளால் பதற்றமடையவில்லை.

காரைநகர் பொன்னாலைப் பாலத்தில் வெடித்த குண்டுகள் ஒருசிறு பரபரப்பை ஏற்படுத்தியபோதும், நகரமும் முற்றவெளிச் சுற்றுலும் சென்ற சனிக்கிழமை அமைதியாகக் காணப்பட்டன.

பகிஷ்கரிப்பைப் பற்றிப் பேசியபோதும், அதனை நடைமுறைப்படுத்த சிலர் எத்தனித்தபோதும் ஜனாதிபதியின் பிரசார உரை எவ்வாறு இருக்கும் என்றஆவல் இருக்கத்தான் செய்தது. ஆனால் அன்று வெடியாத குண்டுகளில் ஜனாதிபதி போட்ட 'குண்டே' மிகப் பெரும் ஏமாற்றத்தைஅளித்தது.

பழைய சேர் பொன்னம்பலம் இராமநாதன் வரலாறு; ஒரு தாய் வயிற்றில் பிறந்த சகோதரர்கள் நாம்; யாழ். சம்பவங்கள், அவற்றிற்கு நிவாரணம்; தமிழ் மொழிக்குத் தேசிய அந்தஸ்து; கல்வி அபிவிருத்திக்கு மாவட்ட அடிப்படையில் முன்னுரிமை; வவனியா, மன்னார் மாவட்டங்களுக்கு வெளிநாட்டு உதவியுடன் ஒன்றிணைந்த அபிவிருத்தித் திட்டங்கள் இவையே ஜனாதிபதியின் பேச்சின் முக்கிய பாகம்.

அவர் போட்ட 'குண்டு' –'டைம் பொம்'மாகவிருந்தாலொழிய – வெடிக்க மறுத்தபட்சத்தில் ''நீங்கள் என்ன செய்தாலும் நானே ஜனாதிபதியாக இருப்பேன்'' என்றது ஒரு வெறும் பேச்சாகக்கருதுவது தவறு. தேர்தல் நாளன்று வெடிக்கும் என்று அவர் நம்பியிருக்கலாம்.

யாழ்ப்பாண வாக்காளர் என்ன அரசியல் கட்டளைக்குட்பட்டபோதும், தேர்தலில் வெல்லும் வேட்பாளரை ஆதரிப்பர்கள் என்ற எண்ணம் ஜனாதிபதியிடம் குடிகொண்டிருக்கலாம்.

எதிரிகளிடமிருந்து ஒருசில வாக்குகள் பெறாலுமே அது வெற்றிக்கு சாதகமல்லவா? அது பெரும் வெற்றியல்லவா?

அதே சமயம், ''நிறைவேற்றும் அதிகாரம் படைத்த ஜனாதிபதி நானே யானால் உங்கள் எதிர்ப்பு என்ன செய்யும்?'' என்ற கருத்தும், கடந்தகால இன்னல்கள் நீடிக்குமோ அல்லது மோசமடையவோ அது வழிவகுக்கும் என்ற பயமுறுத்தலும் அக்கூற்றில் பொதிந்திருக்கலாம்.

எவ்வகையிற் பார்த்தாலும் அது ஏமாற்றமென்று சொல்வதே தவறு போலிருக்கின்றது; ஏதோ ஒரு பெரும் குண்டு போட்டு எங்களைக் கொள்ளை கொள்ளப் போகிறார் என்ற மனப்பால் குடித்தவர்களுக்கே அது ஏமாற்றம்.

சென்ற தேர்தலில் தமிழ் மக்களுக்கு அவர் அளித்த வாக்குறுதி என்னாச்சு? என்று நினைவுகூரும் விவேகம் மக்களுக்குண்டு. எனவே இன்று அவசியமற்ற, அசாத்தியமான பேச்சுக்கள் அவருடைய பிரசாரத்தில் இடம் பெறாதது எவ்விதத்திலும் ஏமாற்றம் அளிக்காது.

ஒரு தாய் பிள்ளைகள் என்றாலும் வாயும் வயிறும் வேறு என்பது யாருக்குத் தெரியாது? அது மட்டுமல்ல, வாயும் வயிறும் திருப்தி அடைவது அவரவரின் பொறுப்பு; அந்தவகையில் அப்பிள்ளைகளின் நிலை வேறுபடலாம்; தாய் ஒரு கண்மூடி, ஒரு கண் முழித்திருப்பதாலே சகோதரர்கள் சண்டையிடுகிறார்கள்; தாயே இந்தச் சண்டைக்குக் காரணமென்பதை ஜனாதிபதி அறியாதவரல்ல.

கடந்த 26 ஆண்டுகளாக பெரும்பான்மை மக்களின் ஆதரவைத் தேடிவந்த சுதந்திர இலங்கையின் ஆட்சிகள் எல்லாம் ஜனாதிபதி இன்று குறிப்பிட்ட 'சகோதரர்களை'ப்பிரித்து, தங்கள் வெற்றியைப் பலப்படுத்த பெரும்பான்மை மக்களின் ஆசைகளுக்குத் தூபமிட்டனர்.

ஒருமொழி, ஒருமதம் என்ற கோஷம், கனவிலிருந்து நனவாய் விட்டது; தமிழ் மக்கள், சேர் பொன்னம்பலம் இராமநாதனின் மக்கள், சிறுபான்மையராயினர், அவர்களுக்குண்டான கதி சரித்திர ஆராய்ச்சிக்குரியதாய்விட்டது.

இந்தத் தாற்பரியம் ஒரு முதுபெரும் அரசியல் வாதியாகிய ஜனாதிபதி ஜெயவர்த்தனாவுக்குப் புரியாத புதிரல்ல; இதனை நிதானமாக்கி சீர்ப்படுத்தும் ஆற்றலில் அவர் நம்பிக்கையற்றவராக இருப்பதே தமிழ்மக்களின் துர்ப்பாக்கியம்.

''தமிழ் மக்கள் இந்தநிலையில் தொடர்ந்து எதிர்க்கும் வல்லமை உடையவர்களா?, ''தான்தான் தப்ப வழிபார்க்கும் 'சுயநல முற்ற' தமிழினம், இந்த— தேசியமொழி, அபிவிருத்திச்சபை போன்ற— பொம்மை விளையாட்டுகளில் எடுபடமாட்டார்களா?'' என்று சிங்களத் தலைவர்கள் மட்டுமல்ல, சிங்கள மக்களே நினைக்குமளவிற்கு நிலை சீரழிந்திருக்கிறது; இது நன்கு புரிந்தவர் ஜனாதிபதி.

எந்த ஆட்சியிலும் ஐந்தாம்படை உருவாகிறது இயற்கை; ஆயினும் ஒரு பெரும் இனம், நாட்டின் முன்னேற்றத்துக்கும், பண்பாட்டிற்கும், செல்வாக்கிற்கும் பல நன்மைகள் ஆற்றிய இனம், தம உரிமைகள் இழந்த நிலையில் ஒற்றுமைப்படுவதெங்ஙனம்?

துவேஷம இருதலைப்பட்டது, அதனை ஒழிப்பதற்கொரு வழி தனி ஆட்சி; அது கோருவதில் என்ன தவறிருக்கிறது?

''பல்கலைக் கல்வி

# வாழ்க்கையுடனும், சமுதாயத்துடனும் தொடர்புள்ளதாக இருக்கவேண்டும்''

(நேற்றைய தொடர்ச்சி)

''நம் நாட்டு பல்கலைக் கழகங்கள் பலவற்றில் தேர்வு முறையிலே அவலமான வீழ்ச்சி ஏற்பட்டுள்ளது. [உங்கள் பல்கலைக்கழகம் அதற்கு விதிவிலக்காக இருக்குமென நம்புகிறேன்], பிரச்சனைகளைத் தீர்க்கும் வகையில் பயன்படும் அறிவையோ பாகுபடுத்தி யுணர்கின்ற திறனையையோ திறனாய்வுச்சிந்தனையோ சோதித்துபார்ப்பதைவிடுத்து, இரக்கமற்றமுறையிலே மாணவரின் வெறும் நினைவாற்றலைச் சோதிப்பதாகவே இப்போதைய தேர்வுமுறை உள்ளது. வேலைபெறுவது தேர்விலே வெற்றியடைவதோடு இணைந்துள்ளது குறிகளை அடைய எந்த முறையும் கையாளப்படலாமெனும் ஒரு வழக்கப்படி, தேர்வின் வெற்றிக்கு உதவுகின்ற எந்த வழியும் – முறையும் சிறப்புடையதாகி விடுகிறது. ''குறுக்குவழிகளிலும் தவறான முறைகளிலும் அறவுணர்வில்லாத உத்திகளிலும் ஈடுபடுகின்ற காரணத்தால் இக்காலத்தில் கல்வியானது கேலிக்குரிய நிலையில் தாழ்ந்துள்ளது. எனவே சமுதாயத்திற்கேற்ற வண்ணம் கல்வியமைந்திடப் போதனையின் தரத்தையுயர்த்தவேண்டும்; அதற்குரிய வகையில் பல்கலைக்கழகக்கல்வியானது வாழ்க்கையுடனும், சமுதாயத்துடனும் தொடர்புடையதாக இருத்தல்வேண்டும், போதிய தரமில்லாத வகையிலே பட்டதாரிகளை உருவாக்கும் ஒருவகைத்தொழிற்சாலையாகப் பல்கலைக்கழகம் அமைதல் கூடாது.''

### பேராசிரியர் எஸ். வி. சிட்டிபாபு

### உண்மையான கல்விபோதனை

உயர்ந்த கல்வித்தரங்களை முறையாய்க்காத்து வருதலாகிய குறிக்கோளை எவ்வாறு அடைவது? ஈடுபாடுகொண்ட ஆசிரியர்களும் ஆர்வமுடைய மாணவர்களும், ஒருவரையொருவர் புரிந்துகொண்டு செயற்படுவார்களேயானால் இதனை எளிதில் அடையலாம். ஆசிரியர்களின் திறமைதான் கல்வியின் முறைமைத் தகுதியையும் பயனையும், வலிமையையும் நிர்ணயிக்கிறது. வெறும் பாடபோதனையும் செய்திகளைத் திரட்டிக் கூறுவதும் உண்மையான கற்பித்தலாக ஆகிவிடாது. இளைஞர்கள் தங்களின் உள்ளார்ந்த திறமைகளை உள்ளூரத்தெரிந்து கொண்டுமுழுமையான உயர்த்தியைஎய்துவதற்குரியநிலையை வாய்ப்பினை–உருவாக்கும்வகையிலே அறிவாற்றலையும் அறிவுணர்வையும் உணர்த்துவதே உண்மையான கல்வி போதனையாகும். சிறந்த இதயமும், சரியானமனமும், உண்மையான நம்பிக்கையும், ஆர்வமான செயல்திறமுங்கொண்ட ஆசிரியர் எவரோ அவரே நல்லாசிரியராவார். பதவிப்பித்தினால் வீழ்த்தப்படாத அவரே சிறந்த எண்ணமும் உறுதி கொண்ட நெஞ்சமும் உடையவராவார்.

மாணவர்களைப் பொறுத்தளவிலே தாங்கள் பல்கலைக்கழக வளாகத்திலே செலவழிக்கும் அரிய ஆண்டுகள் தமது நோக்கியுள்ள எதிர்காலமென்பதை உணரவேண்டும் படைப்பாற்றலும் வலிவும் தாழாத வண்ணம் அவர்கள் தம் எண்ணங்களைச் சிறிதும் அச்சமின்றிப்பேச உரிமையுடையவர்கள் என்பதில் ஐயமில்லை; மாணவர்கள் கருத்து மாறுபாடு கொள்ளக் கற்றுக்கொள்ள வேண்டும். எனினும் மாறுபாடுகாரணமாக வெறுக்கத்தக்கவர்களாக மாறிவிடுதல் கூடாது பல்கலைக்கழகக்கூட்டு வாழ்விலே தொடர்புகொண்ட நிறுவன அமைப்பினில் அவர்கள் பங்குகொண்டுபணியாற்ற நல்ல வாய்ப்பினைப் பெறுதல் வேண்டும் அது உண்மையிலேயே பெரிதும் விரும்பத்தக்கதும்தேவையுடையதுமாகும் பல்கலைக்கழகத்திலிருந்து பெரும்பயன் கொள்ளுமாறு மாணவர்களுக்கென விடுதி வசதிகள், நல்ல நூல் நிலையங்கள் செய்முறைக் கூடங்கள் புத்தக வங்கிகள், தினசரி மாணவர்கள் தங்குதற்குரிய இல்லங்கள். உதவிச் சம்பளம், சம்பளமின்றிப் பயிலும் வாய்ப்பு, சிற்றுண்டிச் சாலைகள், விளையாட்டுத்திடல் போன்ற குறைந்தளவு வசதிகளேனும் அமைத்தல் வேண்டும். ஆராய்ச்சி. திறனாய்வு, துருவி ஐயங்களைதல் போன்றவற்றால் சிறந்த அறிவியற் கண்டுபிடிப்புகளும், புதுமைப் புகுத்தல்களும், ஏற்பட எவ்வாறு உயர்கல்வி காரணமாயிற்று என்பது யாவரும் தெரிந்த செய்தியே. அறிவியல் ஆராய்ச்சி காரணமாகப் புதிய அறிவு நலம் ஏற்படுவதில் ஒரு உத்வேகம் காணப்படுகிறது. பொருளமைப்பிலே கற்பித்தலுக்கென ஓரிடம்உண்டெனினும் பல்கலைக்கழகங்கள் அடிப்படையாராய்ச்சிக்கும் செயல்முறை ஆராய்ச்சிக்கும் ஊக்குகமளித்து வளர்க்க வேண்டும். பாடங்கற்பித்தலும் ஆராய்ச்சியும் இணைந்தே செல்லுதல் வேண்டும்; இல்லையெனில் அவை தனிமைப்பட்டு வாடிவிடும்— தாழ்ந்து போகும். அவை இணைந்து பங்காற்றுவதால் வேளாண்மை, தொழில், வணிகம், போக்குவரத்து முதலிய துறைகள் தொடர்ந்து வலிமைகொண்டு நல்ல வளர்ச்சியையும் முன்னேற்றத்தையும் பெறமுடியும்,

நண்பர்களே! இவ்வுரையின் இறுதிக் கட்டத்தில் ஒரு சிந்திக்கத் தகுந்த கருத்தினை உங்களுக்குக்கூற விரும்புகிறேன். மனித வாழ்வின் சிறப்பிற்கும் பெருமைக்கும் அது பொருத்தமுடையதாகும். சிறந்த உணர்வுகளையும் அறநெறிக் கருத்துக்களையும் கொண்ட கருவூலமாகத் திருக்குறள் அமைந்துள்ளதென்பதை நீங்கள் யாவரும் அறிவீர்கள். அத்தகைய திருக்குறளிலிருந்து ஒரு குறட்பாவினைக் கூறவிரும்புகிறேன்

யாதானும் நாடாமால் ஊராமால் என்னொருவன்
சாந்துணையும் கல்லாதவாறு
(கல்வி 7)

கல்வியாளர்கள் எந்த நாட்டையும் சொந்த நாடாகவும், எந்தஊரையும் சொந்த ஊராகவும் கொண்டு முடிவில்லாத மதிநலத்தினைத் தேடித் தங்கள் ஞானத்தினை – மெய்யறிவைத் தங்கள் நன்மைக்காவும் அது தேவைப்படும் மற்றவர்களுக்காகவும் விரிவாக்கிக் கொள்ள வேண்டுமென்பதைத் தெய்வத் திருவள்ளுவர் பேரார்வமுடன் கூறி அழைக்கிறார். மெய்யறிவிற்கு புதுமையான ஆய்வாற்றலுக்கு ஊக்கமளிக்கும் கண்டுபிடிப்புத் திறனுக்கு நாற்றங்கால்களாகப் பல்கலைக் கழகங்கள் திகழ்கின்றன. அவை திருவள்ளுவரின் அழைப்பிற்கிணங்க ஒருமுகப்பட்ட நோக்கத்துடன் சாதனை புரிவதற்கான ஊக்கத்துடனும் நாம் வீறுகொண்டெழும் வகையிலே நம்மை உருவாக்கட்டும். அறிஞர் ஜெப்பர்சன் சொல்வது போன்று வாய்ப்புக்களெனும் குடியாட்சியறத்தினின்று வெளிப்படும் சாதனைகளின் பண்பாட்சியாகிய கனவினை உண்மைப்படுத்துவோமாக. (க)

## தாக்குதல் வழக்கு:

# தர்மப்பணமாக 200 ரூபா செலுத்துமாறு தீர்ப்பு

(புலோலி)

பெரிய தகப்பனருக்குப் பொல்லால் அடித்துக் காயம் விளைவித்ததாகக் குற்றம் சாட்டித் தொடரப்பட்ட வழக்கில் எதிரி தர்மப்பணமாக 200 ரூபா கட்டினார் இவ்வழக்கு பருத்தித்துறை நீதிமன்றத்தில் நீதவான் திரு. வி. பி. சுந்தரலிங்கம் முன்னிலையில் நடைபெற்றது.

கரவெட்டிமேற்கைச்சேர்ந்த திரு. வி. சிவம் என்பவர் பெரிய தகப்பனாருக்கு பொல்லால் அடித்துக் காயம் விளைவித்தாரெனக் குற்றஞ் சாட்டப் பட்டிருந்தது.

எதிரி சார்பில் ஆஜராகி இருந்த சட்டத்தரணி திரு. வ. மகாலிங்கம், இவர்கள் இருவரும் ஒரே வீட்டில் வசிக்கும் நெருங்கிய உறவினரென்றும், எதிரி உணர்ச்சி வசப்பட்டமையினால் இவரைத் தாக்கிவிட்டாரெனவும், எதிரி தனது குற்றத்தை ஒப்புக்கொண்டாரெனவும் கூறி அவரை மன்னிக்குமாறு கோரினார். வழக்காளியும சமாதானமாகச் செல்ல ஒத்துக் கொண்டார்.

நீதவான் இலங்கை கயரோக தேசிய நிவாரண சங்க வடமராட்சிக்கிளைக்கு தர்மப்பணமாக 200 ரூபா செலுத்திவிட்டு ஒற்றுமையாகச் செல்லுமாறு உத்தரவிட்டார், [க]

# வசதிகட்டண ஆசிரியர் நிரந்தர நியமனம்?

[வவனியா]

வசதிக்கட்டண ஆசிரியர்களுக்கு அரசு, நிரந்தர நியமனம் வழங்க ஆலோசித்து வருவதாகத் தெரியவருகிறது.

கடந்த வாரம் கல்வி அமைச்சுக்கும், ஜனாதிபதிக்கும் வன்னி மாவட்ட வசதிக்கட்டண ஆசிரியர் சங்கம் அனுப்பிவைத்த மகஜர் ஒன்றுக்கு கல்வி அமைச்சிலிருந்து கிடைத்த பதிலிலிருந்தே மேற்படி விபரம் தெரிய வந்துள்ளது

ஆசிரியர் பற்றாக்குறையாகவுள்ள நேரத்தில் பல ஆண்டு காலமாக சேவையாற்றியுள்ள இந்த ஆசிரியர்களுக்கு நியமனம் வழங்கக் கூடிய வகையில் வடபகுதி எம். பிக்கள் உரிய நடவடிக்கைகள் எடுப்பார்கள் என்றும், அதே நேரத்தில் வடபகுதி ஐக்கியதேசியக் கட்சி அமைப்பாளர்களும் இந்த விஷயத்தில் கவனம் செலுத்துவார்கள் என்றும் தாம் நம்புவதாகவும்சம்பந்தப்பட்ட சங்க உறுப்பினர் ஒருவர் நம்பிக்கை தெரிவித்தார். (க)

## ★ ஜனாதிபதி தேர்தல்களம்

1977 கலவரங்களில்

# "பாதிக்கப்பட்ட மக்களுக்கு நிவாரணம் அளிப்போம்"

## வவனியாவில் கொப்பேகடுவ

[வவனியா]

"பிளவுபட்டு இருந்த சிறிலங்கா சுதந்திரக்கட்சி மீண்டும் புத்துயிர் பெற்றுவிட்டது மைத்திரி பிரிவினரும் எமக்கு ஒத்துழைப்பு தருகின்றார்கள். இந்தவகையில் நாம் தமிழ், சிங்கள, முஸ்லிம் மக்களுடைய ஆசியும், ஆதரவும்பெற்று ஏழை மக்களின் தோழனாக உங்கள் முன்னிலையில் ஜனாதிபதி தேர்தலில் சுதந்திரக்கட்சியின் சார்பில் வேட்பாளனாக வந்துள்ளேன். நான் ஜனாதிபதியாக வெற்றிபெறுவது நிச்சயம்"

வவனியாவில் நடைபெற்ற ஜனாதிபதி தேர்தல் பிரசாரப் பொதுக்கூட்டத்தில் ஸ்ரீலங்கா சுதந்திரக்கட்சி அபேட்சகர் திரு. ஹெக்டர் கொப்பேகடுவ மேற்கண்டவாறு தெரிவித்தார்.

வவனியா நகரசபை மைதானத்தில் நடைபெற்ற இந்தக் கூட்டத்துக்கு வன்னிச தொகுதிப் பிரதமஅமைப்பாளர் திரு. எம். நடராசா தலைமைவகித்தார்.

திரு. கொப்பேகடுவ மேலும் பேசுகையில் தெரிவித்ததாவது "1977ம் ஆண்டு நாம் தேர்தலில் 19 லட்சம் வாக்குகளைப் பெற்றோம்.

"இந்த 19 லட்சம் வாக்குகளைபெற வழிநடத்திய எமது தலைவி சிறிமாவுக்கு இந்த ஐ. தே. க.அரசு ஒருகீழ்த்தரமான தண்டனையான குடியியல் உரிமையை பறித்துள்ளது. "இந்தத்தண்டனை 19லட்சம் வாக்குகளைச்செலுத்திய மக்களுக்கும் உரியதுஆகும். இதற்கு நாம் ஒரு பாடம்புகட்டவேண்டும். இதனை எதிர்வரும் 20ம் திகதி மக்கள் காட்டுவார்கள்.

"நான் ஜனாதிபதிதேர்தலில் போட்டியிட தகுதிஅற்றவன் என்று ஜே. ஆர். கூறிவருகின்றார்

"நாம் ஏழை விவசாய மக்களின் தோழன் என்பதனை இங்குகூறிவைக்க விரும்புகின்றேன்.

"தற்போதைய பாராளுமன்றம் எந்தவொரு அதிகாரமும் இல்லாத தனிமனிதனிடம் ஒப்படைக்கப்பட்டுள்ளது. எங்குபார்த்தாலும் இந்த அரசாங்கத்தில் ஊழல் மோசடிகளும் மலிந்து இருப்பதை காணலாம்.

'வேலை நிறுத்தத்தினால் வேலைஇழந்து நிற்கின்ற எமது சகோதரர்களுக்கு நாம் ஆட்சிக்கு வந்ததும் பழைய பாக்கி சம்பளத்துடன் மீண்டும் வேலை வழங்குவோம். அத்துடன் 1978ம் ஆண்டு அரசியல் அமைப்பை தூக்கி எறிந்து 1972இல் நாம்ஏற்படுத்திய அரசியல் திட்டத்தினை செயல்படுத்துவோம். 1977 கலவரங்களினால் பாதிக்கப்பட்டவர்களுக்கு நிவாரணம் அளிப்போம்"

"அத்தியாவசிய பொருள்களை அரசினால் மானிய முறையில் வழங்க நடவடிக்கை எடுப்போம். இப்போது மகாவலி அபிவிருத்திபற்றி பேசுகின்றார்கள் இதற்கு மூலகர்த்தாவாக இருந்தது நாம் தான்'.என்றார்.

முன்னாள் அமைச்சர் திரு. கே.பி. இரத்திநாயக்கா, ஜனாப் அப்துல் மஜித், மாதகல் திரு. கந்தசாமி, திரு. அப்புசாமி ஆகியோரும் பேசினர். [க[

# "பகிஷ்கரிப்பு ஐ.தே.க.வுக்கு ஆதரவாகவே இருக்கும்"

## கிளிநொச்சியில் றேகண விஜேவீரா

(வவனியா]

இந்த நாட்டை மாறி மாறி பல வருடங்கள் ஆட்சி செய்த சிறிலங்கா சுதந்திரகட்சியும், ஐக்கிய தேசிய கட்சியும் இந்த நாட்டு மக்களுடைய எந்தவொரு தேசிய பிரச்னையையும் தீர்க்கவில்லை. 19 ஆண்டுகளாக ஆட்சி செய்த ஐ.தே. கட்சியும் 16 வருடங்களாக சுதந்திரகட்சியும் கடந்த 35 ஆண்டு காலமாக ஆட்சி புரிந்துள்ளதை நீங்கள் அறிவீர்கள். இந்த இரு கட்சியினரும் போட்டிபோட்டு விலைவாசியைக் குறைப்போம் என கூறி ஆட்சிபீடம் ஏறியவர்கள் இந்த நாட்டினுடைய எந்தவொரு பிரச்னையையும் தீர்க்கவில்லை"

மக்கள் விடுதலை முன்னணியின் தலைவரும், ஜனாதிபதி வேட்பாளருமாகிய திரு றேகண விஜேவீர வவனியா நகரசபை மைதானத்தில் நடைபெற்ற தேர்தல் பிரசாரக் கூட்டத்தில் பேசுகையில் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

வடபகுதிஅமைப்பாளர்திரு. பா. கணேசபிள்ளை தலைமையில் நடைபெற்ற இக்கூட்டத்தில் திரு. றேகண விஜேவீர மேலும் பேசுகையில் கூறியதாவது:

"இந்தநாட்டு மக்களுடைய இனப்பிரச்னையை தேசிய அடிப்படையில் சமத்துவ ரீதியில் தீர்க்க முடியும் இதனைக் கடந்த 35 வருடங்கள் ஆட்சி செய்தவர்கள் செய்யவில்லை. நாம் ஆட்சிபீடம் ஏறியதும் சகல இன, மத, மொழிகளுக்கு வேறுபாடின்றி சமஅந்தஸ்த்து வழங்குவோம்.

"தற்போது 5000 இராணுவசிப்பாய்கள் வடக்குக்கு அனுப்பிவைக்கப்பட்டுள்ளனர். தேர்தல் வரும் இவ்வேளையில் தான் கடந்த 5 வருடமாக வடக்குநோக்கி செல்லாதவர்கள் பாதுகாப்புடன் இப்போ புறப்படவுள்ளார்.

"வடபகுதி மக்களுக்கு தவறு செய்துள்ளோம் என்பதனை அவர்கள் நன்கு உணர்ந்துள்ளனர். இதனால்தான் வடக்கு நோக்கி செல்ல பயப்படுகின்றார். 1972, 1978-ம் ஆண்டுகளில் கொண்டுவரப் பட்ட அரசியல் சட்டங்களை நாம் ஆட்சிபீடம் ஏறியதும் கிழித்து எறிவோம்.

"அடிப்படை மனித உரிமைகளை மீறும் அவசரகால சட்டம், புலிப்படை சட்டம், பயங்கரவாத சட்டம் போன்ற அடக்குமுறை சட்டங்களை கொண்டுவந்தவர்கள் ஐ. தே. கட்சியினர்.

"இது ஒரு பெளத்த நாடு என்று கூறுபவர்கள், பெளத்தமத போதனைகளை கடைப்பிடிப்பதில்லை, இனவாதத்தினை வளர்த்து நாட்டை அழிவுப்பாதையில் இட்டுச் சென்றுள்ளார்கள். 55 வயதுக்குப் பின் ஓய்வூதியம் பெற வேண்டுமென சட்டத்தை அமுல்படுத்தியவர்கள் பொது மக்களுக்கு ஒரு சட்டமும், அமுல்படுத்தியவர்களுக்கு ஒரு சட்டமுமாக இருக்கின்றது. எமது ஆட்சியில் எல்லோருக்கும் ஒரேஒரு சட்டமே இருக்கும்.

"ஜனாதிபதி தேர்தலை பகிஷ்கரிப்பதினால் ஐ. தே. கட்சிக்கு ஆதரவாக இருக்கும், எனவே புதியதொரு ஐக்கியத்தையும், ஜனநாயக சமத்துவ அரசியல் திட்டத்தையும் அமைக்க என்னையே ஆதரியுங்கள்."

இக் கூட்டத்தில் கல்குடா தொகுதி அமைப்பாளர் திரு. சிவஞானம், கொழும்பு மாவட்ட அபிவிருத்தி சபை உறுப்பினர் திரு. மகிந்த பத்திரான, திரு. வன்னி ஆராய்ச்சி ஆகியோரும் உரையாற்றினர். (க)

# கூட்டணி போட்டியிடாதது ஏன்?--'தேவா' விளக்கம்

[மட்டக்களப்பு]

"ஐக்கிய தேசியக்கட்சியின் அபிவிருத்தி வேலைகளை கூட்டணியும் மனமார ஏற்று ஜனாதிபதி தேர்தலில் போட்டியிடாது ஒதுங்கிவிட்டது. ஆகவே தமிழ் மக்கள் அனைவரின் ஆதரவும் ஐக்கிய தேசியக்கட்சிக்கே" என்று உள்நாட்டலுவல்கள் அமைச்சர் திரு. கே. டபிள்யூ தேவநாயகம் அவர்கள் தெரிவித்தார்கள்.

கடந்த வாரம் திருப்பழகாமம் விவசாயிகள் சங்க திறப்பு விழாவுக்குப் பிரதம அதிதியாகக் கலந்து கொண்டு உரையாற்றுகையிலேயே அமைச்சர் தேவநாயகம் மேற்கண்டவாறு குறிப்பிட்டார்.

மேற்படிசங்கத்தலைவர் திரு, எஸ். விநாயகமூர்த்தியின் தலைமையில் நடைபெற்ற இவ் வைபவத்தில் அமைச்சர் தேவநாயகம் தொடர்ந்து உரை நிகழ்த்துகையில்:

ஐக்கிய தேசியக்கட்சி மாத்திரமே இன்று இலங்கையிலுள்ள சகல இனமக்களாலும் ஏற்றுக் கொள்ளப்பட்ட ஒரே கட்சியாகும். எமது கட்சியில் இன, மத, மொழிவேறுபாடுகளுக்கு இடமில்லை. ஐ தே. கட்சி சகல இனமக்களுக்கும் சொந்தமானதே!

# சூறுவளிப் பிரசாரத்தில் அமைச்சர் 'தேவா'

(மட்டக்களப்பு

பட்டிருப்புத் தொகுதியில் ஐக்கிய தேசியக் கட்சிக் கிளைகளை அமைத்து, ஜனாதிபதித் தேர்தல் பிரசார வேலைகளை சூறுவளி வேகத்தில் உள்நாட்டலுவல்கள் அமைச்சர் திரு. கே. டபிள்யூ தேவநாயகம் மேற்கொண்டுவருகிறார்.

கடந்த வாரத்தில் அமைச்சர் பல ஐக்கிய தேசியக்கட்சிக் கிளைகளைப் புனரமைத்தும், புதிதாக அமைத்தும்வந்துள்ளார். கல்லாறு, கோட்டைக் கல்லாறு ஆகிய இரண்டு கிராமங்களில் மட்டும் ஒரே நாளில் ஐந்து கிளைகளை அமைத்துள்ளார்.

இதேபோன்று திருப்பழகாமம் கிராமத்திலும், எருவில், குறுமன்வெளி, புதுக்குடியிருப்பு ஆகிய கிராமங்களிலும் ஐக்கிய தேசியக் கட்சிக் கிளைகளை அமைத்து தேர்தல் பிரசார வேலைகளில் மும்முரமாக ஈடுபட்டுவருகிறார். [அ]

## நிறைகுறைவு மோசடி வழக்கு:

# "பதினலரை அவுன்சாக பாணின் நிறைஇருந்தது"

(சாவகச்சேரி)

"சம்பவதினம் காலை 10மணியளவில் விலைக்கட்டுப்பாட்டதிகாரி நவரத்தினம் என்பவர் ஒரு 5 ரூபாத்தாளை என்னிடம் தந்து சங்கத்தானையிலுள்ள ஒரு கடையில் பாண்வாங்கி வரும்படி கூறினர், நான் கொடுத்ததும், ஒரு பாணையும் மிகுதியாக 2 ரூபாவையும் எதிரி தந்தார்.

பாண் நிறைகுறைவுமோசடி வழக்கில் சாட்சியமளிக்கையில் யாழ். விலைக்கட்டுப்பாட்டுப் பரிசோதகர் செ. நவரத்தினம் மேற்கண்டவாறு கூறினர்.

இவ்வழக்கு சாவகச்சேரி மாவட்டநீதிமன்றத்தில் நீதிபதி எம் எச். காரியப்பர் முன்னிலையில் விசாரணைக்கெடுத்துக்கொள்ளப்பட்டது.

இவ்வழக்கில் 80ம் மே 13-ல் சங்கத்தானையைச்சேர்ந்த சின்னத்தப்பி கனகசபை என்பவர் நிறைகுறைவான பாணைவிற்றதாகக் குற்றஞ்சாட்டப்பட்டிருந்தது.

எதிரிசார்பில் சட்டத்தரணி ஆர். ஸ்ரீசிவாயா ஆஜரானர்,

தொடர்ந்து பரிசோதகர் நவரத்தினம் சாட்சியமளிக்குபோது குறிப்பிட்டதாவது; "காசையும் பாணையும் நான் குறித்த அதிகாரியிடம்கொடுத்தேன் அவர்தான் விலைக்கட்டுப்பாட்டதிகாரி என்பதற்குரிய அத்தாட்சியைக் காண்பித்து எதிரியின் கடைக்குச் சென்று தராசுமுத்திரையிடப்பட்டிருக்கிறதா என்பதைப் பார்வையிட்டபின்னர் பாணை நிறுத்துப்பார்த்தோம் பதினலரை அவுன்சு நிறை மாத்திரம் காணப்பட்டது

"பாணின் குறைவைக்காண்பித்து 2 ரூபாவைக் கொடுத்து முன்னர் குறித்துவைத்துக் கொண்டு கொடுத்த 5 ரூபாத்தாளைப் பெற்றுக் கொண்டோம் ஏனைய சில பாண்களையும் நிறுத்துப்பார்த்தபோது அவையும், பதினலரை அவுன்ஸ்தான் இருந்தன, அதன்பின்னர் எதிரியின் வாய் முறைப்பாட்டைப் பதிவு செய்தோம். பாணை அதிகாரியின் உத்தரவுப்படி ஒரு கடதாசியில் சுற்றினோம். எதிரியின் கைஅடையாளமும் எடுக்கப்பட்டது.

பாண் வாங்கியபோது எதிரியினுடைய படியிலிருந்தே நிறைகுறைவு கண்டுபிடிக்கப்பட்டது' தராசு அந்தாண்டுக்குரிய முத்திரை இடப்பட்டிருந்தது விசாரணை நவம்பர் 10ம் தேதிவரை ஒத்திவைக்கப்பட்டுள்ளது. (க)

# "பொன்னான நேரத்தை இளைஞர்கள் பயன்படுத்த..."

(கரவெட்டி)

"இன்றைய காலகட்டத்தில் இளைஞர்களை நல்லவழியில் செயற்படுத்தி அவர்களது ஆற்றல்களை வெளிக்கொணரவும் அதன் மூலம் ஆக்கபூர்வமான நன்மைகளைப் பெறவும் அனைவரும் முயற்சி எடுக்கவேண்டும்" என்று யாழ். மாவட்ட விஞ்ஞானக் கல்வி ஆலோசகர் திரு சி. அம்பிகாவரன் மேல் கரவை ஈழ இளைஞர் அறிவகத்தைப் பிரதம விருந்தினராகக் கலந்து கொண்டு திறந்து வைத்துப் பேசுகையில் குறிப்பிட்டார்.

இளைப்பாறிய ஆசிரியர் திரு. பிலிப் தலைமையில் நடைபெற்ற இத்திறப்பு விழாவில் விஞ்ஞானக் கல்வி ஆலோசகர் திரு. அம்பிகாவரன் தொடர்ந்து பேசுகையில், "இளைஞர்கள் தங்கள் பொன்னான நேரங்களை அவசியமற்ற அரட்டையில் செலவு செய்யாது உபயோகமான அறிவைப்பெறச் சிறந்த நூல்களைத் தாங்கும் அறிவகங்கள் அவசியம் என்றார்.

திரு மு. வல்லிபுரம், ஆசிரியை திருமதி வ. இராசையா, டாக்டர் பாலகிருஷ்ணன் ஆகியோரும் பேசினர்கள். செயலாளர் செல்வன் ஏ. விக்டர் விமலகுமார் நன்றி தெரிவித்துப் பேசினர். கலை நிகழ்சிகளும் இடம்பெற்றன (அ)

ஐ. தே. கட்சியின் அபிவிருத்திவேலைகளை கூட்டணி ஏற்றுகொண்டு இன்று ஜனாதிபதி தேர்தலில் போட்டியிடாது ஒதுங்கியுள்ளது. இதேபோன்று முஸ்லிம்களும் ஐக்கிய தேசியக் கட்சியையே ஆதரிக்கின்றனர்' என்றார்.

# நிர்வாகிகள்

[யாழ்ப்பாணம்]

யாழ். கொட்டடி கிராம முன்னேற்றச் சங்கத்தின் நடப்புவருட நிர்வாகிகளாகப் பின்வருவோர் தெரிவுசெய்யப்பட்டுள்ளனர்:

தலைவர்: ஆ. தியாகராசா, செயலாளர்: செ தனராசா, பொருளாளர்; ச பூலோகம், உபதலைவர்: க அருமைராசா, உபசெயலாளர்: நா நவரட்ணராசா, உபபொருளாளர்: ஜ் தவராசா.

ஆறுபேர்கொண்ட நிர்வாக சபையும் தெரிவுசெய்யப்பட்டது.

# விளையாட்டு போட்டிகள்

(கரவெட்டி)

கரவெட்டி வடக்குகிராமோதய சபை ஆண்கள் பெண்களுக்கு இடையே தனித்தனியான விளையாட்டுப் போட்டிகளை நடத்த முடிவு செய்துள்ளது.

அடுத்த மாதம் வதிரி டையமன் விளையாட்டுக்கழக மைதானத்தில் நடைபெறவுள்ள இவ்விளையாட்டுப் போட்டிகளில் கரபந்தாட்டம், உதைபந்தாட்டம், தாச்சி ஆகிய போட்டிகள் ஆண்களிடையேயும், சடுகுடு. வலைப்பந்தாட்டம் ஆகிய போட்டிகள் பெண்களிடையேயும் நடத்தப்படவுள்ளன.

# ‘விஞ்ஞானரீதியில் பனம் பொருள் உற்பத்தி: கூ. சங்கங்கள் முன்வரவேண்டும்

## அரசின் அக்கறையும் அவசியம்’

### இந்திய நிபுணர் யோசனை

(புலோலி)

‘‘விஞ்ஞான ரீதியிலான உத்திகளைப் புகுத்துவதன் மூலம் தான் நாட்டின் உற்பத்தியைப் பெருக்க முடியும். இதற்குக் கூட்டுறவுச் சங்கங்கள் முன்வர வேண்டும். இச்சங்கங்களின் ஆலோசனைகள், உதவிகள், முயற்சிகள் மூலமே இவற்றைச் சாதிக்க முடியும். பனம் பொருட்களின் உற்பத்தியைப் பெருக்குவது, சந்தைப்படுத்துவது, அவற்றை வெளிநாடுகளுக்கு ஏற்றுமதி செய்வது இம்மூன்றிலிலும் நாம் அதிக கவனமெடுக்க வேண்டும். கூட்டுறவு முறை இதற்குத் தகுந்த சாதனமாகும்.’

இவ்வாறு, தமிழ் நாடுகாதியன் கிராமிய கைத்தொழில் சபையின் பணிப்பாளரும் தமிழ்நாடு அரச ‘பாம்கற்’ உற்பத்தி சந்தைப்படுத்தும் நிறுவன விசேஷ ஆலோசகருமான டாக்டர் கே. சம்பந்தம் யாழ். மாவட்ட தெங்கு பனம் பொருள் உற்பத்தி விற்பனவுக் சங்கங்களின் கூட்டுறவு தலைவர்கள், பொதுமுகாமையாளர்கள், பிரதிநிதிகளைக் கொண்ட விசேஷ கூட்டத்தில் பேசுகையில் குறிப்பிட்டார்.

இக் கூட்டம் வடமாகாண தெங்கு பனம் பொருள் கூட்டுறவுச்சங்க சமாஜ மண்டபத்தில் சமாஜத் தலைவரும் யாழ். மாவட்ட அபிவிருத்திசபை உறுப்பினருமான திரு. சு. நடேசு தலைமையில் நடைபெற்றது. டாக்டர் கே. சம்பந்தம் தொடர்ந்து பேசுகையில்,

பனம் பொருள் அபிவிருத்திக்கு இலங்கை அரசாங்கம் ஊக்கம் அளித்து வருவது தமக்கு மகிழ்ச்சியை அளித்துள்ளதென்றும், பனம்பொருள் அபிவிருத்தி சபைத் தலைவர் திரு. க. நடராசா தமது அனுபவத்தையும் ஆற்றலையும் முற்று முழுதாக இத்துறைக்குப் பயன்படுத்தி வருகிறார் என்றும், மிகவும் சுறுசுறுப்பாக இயங்கிவரும் அவர் துரித அபிவிருத்திகளை மேற்கொள்வார் என்பதில் தமக்குச் சந்தேகமில்லையென்றும் தெரிவித்தார்.

**பனம்பொருள் மூலம் பலகோடி ரூபா இந்தியா பெற்றது.**

பனம் பொருள் உற்பத்திப் பொருட்களை ஏற்றமதி செய்தல் மூலம் இந்தியா பலகோடி ரூபாவைச் சம்பாதிதத்துள்ளது. இலங்கையும் பனம் பொருளை ஏற்றுமதி செய்யக் கூடிய வகையில் உற்பத்திகளை மேற்கொள்ள வேண்டும். இலங்கை 40 லட்சம் ரூபாவைப் பனந்தும்பு ஏற்றுமதி மூலம் சம்பாதித்திருப்பதாக ஏற்றுமதி அபிவிருத்திசபை அதிகாரி திரு. விஜரத்ன தெரிவித்தார். இநத ஏற்றுமதியை மேலும் அதிகரிக்க வேண்டும். பனந்தும்பைக் கூடுதலாக உற்பத்தி செய்து வழங்குவதன் மூலமே அவற்றைச் சுலபமாகச் சந்தைப்படுத்தமுடியும்.

**இலங்கையில் தரமான தும்பு**

தும்புகளுக்குச்சாயம் ஊட்டுவது பற்றிய ஆலோசனைகளையும் உதவிகளையும அபிவிருத்திப் பணிகளையும் செய்துதர நாம் தயாராக உள்ளோம்.

தும்பு உற்பத்தியை மேலும் அதிகரிப்பதற்குத் தும்பு எடுப்பதற்கு ஏற்ற பனை வடலி மரங்கள் உள்ளனவா என்பது தான் முக்கியம். இருவருடங்களுக்கு ஒரு முறையே பனந்தும்புக்காக வடலி மரத்தை அறுக்க வேண்டும். வடலிமரத்தைப் பொறுத்தே கறுப்புத்தும்பு, வெள்ளைத் தும்புகளைப் பெறமுடியும். இலங்கைப்பனந்தும்பு மிகவும் தரமானது உயர்ரகத்தும்பை நாம் தயாரிக்கவேண்டும் வருடம் முழுவதும் தும்பை உற்பத்தி செய்வது கஷ்டமானது. இரண்டாம் உலகயுத்த காலத்தின்போதே கேரளாவில் பனந்தும்பு ‘பிரஷ்’கள் உற்பத்தி செய்ய ஆரம்பிக்கப்பட்டன.

‘,எமது உற்பத்திப்பொருட்களை உள்ளூரில் தேவைப்படும் அளவுக்கு உற்பத்தி செய்து கொடுக்கத்தயாராக இருக்க வேண்டும். இதற்கு இலங்கை பனம்பொருள் அபிவிருத்தி சபையும். ஏற்றுமதி அபிவிருத்திசபையும் உதவி அளித்து ஊக்குவிக்கும். பதநீரை வீணே ஊற்றக்கூடாது. எந்நேரமும் பனங்கட்டியாக்கக்கூடிய வகையில் பனம்பாணியைப் பாதுகாப்பாக வைத்திருக்கலாம் சிறிய கைத்தொழில் அடிப்படையில் பனம் உற்பத்திகளை மேற்கொள்ள வேண்டும்.

**சீவல்தொழிலை நவீனப்படுத்தவேண்டும்**

இலங்கையில் சீவல்தொழிலில் நவீன முறைகளைப் பயன்படுத்தவேண்டும். மரம் ஏறும் இயந்திரம் கண்டுபிடிக்கப்பட வேண்டும்.

இந்தியாவில் அரசாங்கம் சகல அரச திணைக்களங்களுக்கும் தேவையான பொருட்களை எப்மிடம்இருந்தே வாங்க வேண்டுமென்று உத்தரவிட்டுள்ளது இதேபோன்று இலங்கை அரசாங்கமும் உத்தரவு பிறப்பித்தால் பனம் உற்பத்திப்பொருட்களுக்கு அதிக கிராக்கி ஏற்ப வதுடன், உற்பத்தியும் அதிகரிக்கும் எமது நாட்டுக்குத் தேவையானவற்றை உற்பத்தி செய்த பின்னரே வெளிநாடுகளுக்கு ஏற்றுமதி செய்தல்வேண்டும்’’ என்று கூறினர்.

இலங்கை பனம்பொருள் அபிவிருத்திசபைத் தலைவரும் சமாஜச் செயலாளருமான திரு கே. நடராசா, இலங்கை ஏற்றுமதி அபிவிருத்திசபை உற்பத்தி அதிகாரி திரு. பி. என்.எஸ். விஜயரத்ன பனம் பொருள் அபிவிருத்திசபை ஆலோசகர், பணிப்பாளர் டாக்டர் எஸ். மோகனதாஸ் ஆகியோரும் கூட்டத்தில் கலந்து கொண்டனர். (அ)

---

## மீசாலைகொள்ளைவழக்கு:

## ‘1-ம் எதிரி சைக்கிளை 3-ம் எதிரியிடம் கொடுத்தார்’

[சாவகச்சேரி]

‘‘சம்பவதினம் கடையிலிருந்து கனகரத்தினமும்நானும் லாச்சியிலிருந்தகாசைஎடுத்துக்கொண்டு 15 யார் தூரம்சென்றதும் நாகேஸ்வரனும் மனோகரனும் கனகரத்தினத்திற்கு அடித்தார்கள். கனகரத்தினம் சைக்கிளையும் பணத்தையும் கீழே போட்டார். வடிவேலு காசை .எடுத்துக்கொண்டு சைக்கிளை 3ம் எதிரியிடம் கொடுத்தார்.’’

மீசாலை கொள்ளைவழக்கில் சாட்சியமளிக்கையில் மீசாலை தெற்கைச் சேர்ந்த வைத்திய நாதன் விஜயகுமார் மேற்கண்டவாறு கூறினர்.

இவ்வழக்கு சாவகச்சேரி மாவட்டநீதிமன்றத்தில் நீதிபதி எம். எச். காரியப்பர் முன்னிலையில்விசாரணைக்கெடுத்துக் கொள்ளப்பட்டது

இவ்வழக்கில் 82 மே 18ல் மீசாலையைச் சேர்ந்த வீரவாகு வடிவேலு, மனோகரன் நாகேஸ்வரன், செல்லக்கண்டு என்பவர்கள் அவ்வூரைச்சேர்ந்த கனகரத்தினம என்பவரது சைக்கிளையும் 2500 ரூபா பணத்தையும் கொள்ளை அடித்ததாக குற்றஞ்சாட்டப்பட்டிருந்தது

எதிரிகள் சார்பில் சட்டத்தரணி ஆர் ஸ்ரீசிவாய சட்டத்தரணி வ. செல்லத்தம்பி ஆகியோர் ஆஜராகினர்.

விஜயகுமார் தொடர்ந்து சாட்சியமளிக்கையில் கூறியதாவது:

அன்று கனகரத்தினம்கடைக்குச் சீனிவாங்கப்போனேன். நாகேஸ்வரனும் செல்லக்கண்டுவும் கடைக்குப்போய் கனகரத்தினத்துக்கு அடித்துக்கடையால் எழும்பச்சொன்னதாகக் கனகரத்தினம் கூறினர்.

விசாரணை நவம்பர் 8ம்தேதிக்கு ஒத்திபோடப்பட்டுள்ளது. (க)

---

## லட்சம் ரூபா ஒதுக்கீடு

[அரியாலை)

யாழ்ப்பாணம் கனகரத்தினம் மத்திய மகா வித்தியாலயத்திற்கு இரண்டு மாடிக் கட்டிடம் அமைப்பதற்கு நல்லூர்த்தொகுதிப் பாராளுமன்ற உறுப்பினர் திரு. எம். சிவசிதம்பரம் பன்முகப்படுத்தப்பட்ட வரவு செலவுத்திட்டத்தின் கீழ் ஒரு லட்சம் ரூபா ஒதுக்கீடு செய்துள்ளார். கட்டிட வேலைகள் மிகவிரைவில் ஆரம்பிக்கப்படவிருக்கின்றன. [அ]

---

## இளம் பெண் தற்கொலை

வவனியா

குடும்பப் பிரச்னை காரணமாக திருமணமாகி ஒரு வருடமான இளம் பெண் கிருமிநாசினி அருந்தி தற்கொலை செய்து கொண்டார்

இவரது மரணவிசாரணையை வவனியா மாவட்ட திடீர் மரண விசாரணை அதிகாரி டாக்டர் எஸ். கே. பாலசிங்கம் நடத்தினர்

இறந்தவரின் கணவர் இராமலிங்கம் தனது சாட்சியத்தில் தெரிவித்ததாவது:

தங்களுக்கு திருமணமாகி ஒரு வருடமென்றும், தங்களுக்கு 3 மாத குழந்தை ஒன்று உண்டு என்றும் தற்போது தமது தாய் வீட்டில் வசித்து வருவதாகவும் சம்பவ தினம் நாம் தனிக்குடும்பம் நடத்த வேண்டுமென இறந்த எனது மனைவி வற்புறுத்தினர் வசதி வரட்டும் என்று கூறினேன் இந்த நிலையில எனக்கும் மனைவிக்குமிடையில் பிணக்கு ஏற்பட்டது

இதனல் மனைவி மனம் உடைந்த நிலையில் காணப்பட்டார் அதன்பின்னர் கிருமிநாசினி குடித்துவிட்டார் என அறிந்து வவனியா ஆஸ்பத்பத்திரிக்கு கொண்டுவந்த போது மரணமாகிவிட்டார் என தெரிவித்தனர்

இறந்தவரின் தந்தை சின்னையா சிவனுவும் சாட்சியமளித்தார்

சாட்சிகளை வவனியா பொலிஸ் கான்ஸ்டபிள் திரு கே. பியதிலக ஆஜ செய்தார்

மரணவிசாரணை அதிகாரி தற்கொலையெனத் தீர்ப்பளித்தார். (வெ)





றுமிக்கோ
நாடறிந்த வர்ணக் குடும்பம்
தேடி வருகிறது உங்களை
யாழ்ப்பாணத்தில்

றுமிக்கோ இலச்சினை கொண்ட பொருட்கள்
உங்களுக்குப் புதியன வல்ல

- றுமிக்கோ இமல்சன் பெயிண்ட்
- றுமிக்கோ வார்ணிஷ்
- றுமிக்கோ தின்னர்
- றுமிக்கோ மெத்திலேட்டட் ஸ்பிரிட்
- றுமிக்கோ டர்ப்பன்டைன்

ஆகிய இத்தனையும், நீங்கள் இதுவரை கொழும்பிலும் மற்று மிடங்களிலும் இருந்து தருவித்து உபயோகப் படுத்தி மகிழ்ந்தவையே. இத் தரமிக்க பொருட்களை நீங்கள் உங்கள் கட்டிட, மற்றும் பூச்சு வேலைகளுக்கு இனிமேல் இலகுவாக யாழ்ப்பாணத்திலேயே பெற்றுக்கொள்ளலாம்

மனையழகு மிளிர உங்கள் மனைநாடி வருகிறது, தரமிக்க, நாடறிந்த றுமிக்கோ வர்ணக் குடும்பம் சகாய விலைகளில், எல்லாப் பெயிண்ட் விற்பனை நிலையங்களிலும் பெற்றுக் கொள்ளலாம்

RUMECO INDUSTRIES LIMITED
15, MELBOURNE AVENUE, COLOMBO 4.
TEL: 580632 T'GRAMS - "NORWES COLOMBO"

# பாடசாலைகளில் திடீர் சோதனைநடத்தஏற்பாடு!

(மாவிட்டபுரம்)

வடமாநிலக் கல்வித் திணைக்கள கல்வியதிகாரிகள் குழு மீண்டும் இப்பிரதேச பாடசாலைகளில் திடீர் சோதனை மேற்கொள்ள இருக்கிறது.

வடமாநிலக் கல்வித் திணைக்கள கல்வியதிகாரிகள் குழு இப்பிரதேச பாடசாலைகளில் முன்னர் நடத்திய திடீர் பரிசோதனைகளின்போது பல்வேறு ஒழுங்கீனங்கள் கண்டு பிடிக்கப்பட்டு சம்பந்தப்பட்டவர்கள்மீது நடவடிக்கை எடுக்கப்பட்டிருந்தது.

இதேபோன்று மீண்டும்திடீர் பரிசோதனைகளை நடத்த வடமாநில கல்விப்பணிப்பாளர் திரு. எம். சியாம்பிள்ளை ஏற்பாடு செய்துள்ளார்.

பாடசாலை ஒழுங்கு ஆசிரியார்களது ஒழுங்கு, மாணவர் வரவு, கற்பித்தல் முறை உட்பட மற்றும் பல்வேறு விடயங்கள் இத்திடீர் பரிசோதனையின்போது ஆராயப்பட்டவுள்ளது

இத்திடீர் பரிசோதனைக்குழுவில் பிரதமக் கல்வியதிகாரிகள், கல்வியதிகாரிகள், விசேடப் பாடங்களுக்குப் பொறுப்பான கல்வியதிகாரிகள் ஆகியோர் அங்கம் வகிப்பார்கள். (க)

[கரவெட்டி]

கரவெட்டி பரலோக மாதா ஆலயத்தில் கடந்த சனிக்கிழமை கத்தோலிக்க மக்கள் குடும்பம் குடும்பமாக ஒன்று கூடி செபமாலை தியானத்தில் கலந்துகொண்டனர். இத்தேவாலயத்தில் கடந்த இரு மாத காலமாக திருப்பலிப் பூசை ஆராதனைகள் நடைபெறுமல் இருந்துவருவதுகுறிப்பிடத்தக்கது.

50வது மகத்தான நாள்
வின்ஸர் (யாழ்.நகர்)
தினசரி 4 காட்சிகள்
சந்திரசேகர்—சுபாஷினி
பாலைவனச்சோலை

வெஸ்லி (மானிப்பாய்)
தினசரி 6-15, 9-15
சனி, ஞாயிறு 2-30
ஜெய்சங்கர்—தீபா
முடிசூடா மன்னன்

கடைசி சிலதினங்கள் மட்டும்
ஹரன் (யாழ். நகர்)
தினசரி 4 காட்சிகள்
சரத்பாபு — சுபாஷினி
நெஞ்சத்தைக் கிள்ளாதே
(கலர்)

மனோகரா (யாழ்ப்பாணம்)
தினசரி 5 காட்சிகள்
CARRY ON ENGLAND
(Comedy Film)

றீகல் 3-வது ஹவுஸ்புல் வாரம். 10-30,
[யாழ்.நகர்] 2-30, 6-15
9-30
ரஜனிகாந்த்—ரதி, ஜெய்சங்கர்
முரட்டுக்காளை
(கலர்)

சாந்தி [யாழ்.நகர்]
Daily 5 shows
THE BODY
Strictly for Adults
Color–Brand New Print

வெலிங்டன்
[யாழ்ப்பாணம்]
தினசரி 4 காட்சிகள்
ஆயிரம்வாசல் இதயம்
8-ம் திகதி முதல்
ரயில் பயணங்களில்

லிடோ தினசரி 5 காட்சிகள்
[யாழ்ப்பாணம்]
The Long Riders
5-ந் திகதி முதல்
தெய்வப் பிறவி

ராணி (யாழ் நகர்) தினசரி 10-30, 2-00, 6-00, 9-30.
ஜெமினி — சரோஜாதேவி — நாகேஷ்
பணமா பாசமா

ஸ்ரீதர் (யாழ்.நகர்) தினசரி 4 காட்சிகள்
எம். ஜி. ஆர்-மஞ்சுளா-லதா
நேற்று இன்று நாளை
எமது அடுத்த வெளியீடு
நம் நாடு

ராஜா (யாழ்.நகர்)



இந்தியாவில் 300 நாட்களுக்குமேல்ஓடி பொன்விழாக் கொண்டாடிய வெற்றிச்சித்திரம்.
தினசரி 4 காட்சிகள்
பாக்கியராஜ்-சரிதா
மௌன கீதங்கள்
(ஈஸ்ட்மன் கலர்)
டைரக்ஷன் வெள்ளிவிழாப்பட இயக்குநர் பாக்கியராஜ்

# இன்றைய பலன்

புரட்டாதி மாதம் 18ம் திகதி
திங்கட்கிழமை
(4—10—82)

மேடம்: எவ்விடயத்திலும் நன்ருக ஆலோசித்த பின்பே முடிவெடுக்கவும். முகமன்பேசுவோர் விடயத்தில் முன்னெச்சரிக்கையுடன் இருக்கவும்.

இடபம்; பேச்சவன்மையால் பெரும்புகழ் கிடைக்கும். பெரிய இடத்துச் சகவாசம் உங்களுக்குச் செல்வாக்கைத் தேடித்தரும். வரவிலும் உயர்வு காணும்.

மிதுனம்; வெளியிடத்துப் பயணம் வேதனையைத் தரலாம். வேண்டாத உறவுகளைத் துண்டித்தல் நன்று சகோதர வழியாலும் கவலைகள் தோன்றக்கூடும்.

கடகம்: தகுதியில் முன்னேற்றமுண்டு. தரமான வாழ்வும் கிட்டும். எதிரிகள் பணிவர். எதிலும் வெற்றியும் உண்டு. வாகனச் சொந்தக் சொந்தக்காரருக்கு நல்லதினம்

சிங்கம்: வாழ்க்கை இன்று அமைதியாகக் செல்லும் மனம்போல் யாவும் நடக்கும். உறவினர்கள் ஆதரவு தாராளமாகக்கிடைக்கும். பொன்ஞன தினம்.

கன்னி: தூரதேசவாசம் உங்களைத் துயரத்தில் ஆழ்த்தும். எதிர்பாராத விபத்துக்கும் இடம் ஏற்படலாம். ஆயுதங்களுடன் பழகுபவர் அவதானம் வேண்டும்.

துலாம்; களஸ்திரவழியால் நன்மைகள் வந்து சேரும். குடும்பத்தில் தென்றல் வீசும். கவர்ச்சிகரமான நிகழ்ச்சிகளை இரசிப்பதில் காலத்தைக் கடத்துவீர்கள்.

விருச்சிகம்: அரச பயத்துக்கும் இடமுண்டு வழக்கு விவகாரங்களில் மாட்டிக்கொள்ள வேண்டாம். மின்னியல்பொறியியல் பகுதிகளில் கடமையாற்றுவோர் கவனம் வேண்டும்.

தனு: உயர்ந்த எண்ணங்கள் உங்களை புகழின் உச்சத்திற்கு அழைத்துச் செல்லும். தெய்வ வழிபாட்டில் அதிக ஆர்வம் பிறக்கும். கால்நடைவிருத்திக்கும் இடமேற்பட முடியும்.

மகரம்: உத்தியோகத்தில் உயர்வுடன் உரிமையும் கிடைக்கும். உற்சாகமாகக் கடமையாற்றுவீர்கள். உவகையும் சேரும்.

கும்பம்: நிதியில் நல்ல அபிவிருத்தி காணப்படுகிறது. நீண்டநாள் கடன் தொல்லை இன்று நிவர்த்தியாகும். கணவன் மனைவி உறவு முறைகள் மகிழ்ச்சிநிறைந்தாகஇருக்கும்.

மீனம்: ஏமாற்றத்தின் தாக்குதல் உங்கட்கு வேதனைச் சோர்வைத் தரலாம். குடும்பத்திலும் சிறிய பூசல்கள தலைதூக்கும். தனிவழிப் பயணத்தைத் தவிர்த்துக்கொள்ளவும.

சோதிடக் கலாநிதி
திருமலை
க. வேலுப்பிள்ளை

# ‘அரிசியில் தன்னிறைவு’

(கொழும்பு)

அடுத்தாண்டில் அரிசி இறக்குமதி செய்யவேண்டிய அவசியம் ஏற்படமாட்டாது என்று வர்த்தக, கப்பல் துறை அமைச்சர் திரு. லலித் அத்துலத்முதலி தெரிவித்தார்.

பன்னிரண்டு கோடி புசல் நெல் நாட்டின் தேவையைப் பூர்த்தி செய்யத் தேவைப்படுகிறதென்றும் அடுத்தாண்டில் நாட்டின் தேவையை உள்ளூர் நெல் உற்பத்தி மூலம் பூர்த்தி செய்ய முடியுமென்றும் அமைச்சர் கூறினர்.

இந்த ஆண்டில் இன்னமும் அரிசி இறக்குமதி செய்யப்படவில்லையென்றும் அமைச்சர் லலித் தெரிவித்துள்ளார்.

# சிறுவரின் நடவடிக்கைகளை மேம்படுத்த வேண்டும்

[புலோலி]

எமது பகுதிகளின் அபிவிருத்திகளை மேற்கொள்ளும் போது எமது சிறுவர்களின் கல்வி விளையாட்டு கலாச்சார துறைகளில் அதிக கவனம் செலுத்த வேண்டும். இதன் மூலமே சிறுவர்களின் கல்வியறிவு மேம்படுத்த முடிவதுடன் நாட்டிற்குகந்த சிறந்த பிரஜைகளையும் உருவாக்க முடியும்''

இவ்வாறு பருத்தித்துறை தும்பளை கிழக்கு சிறுமலர்கள் பாடசாலை வருடாந்த விளையாட்டுப் போட்டியிலே பிரதம விருந்தினராகக் கலந்துகொண்டு உரையாற்றிய பருத்தித்துறை உதவி அரசாங்க அதிபர் பிரிவு பிரதேசசபைத் தலைவர் திரு. எஸ். எம். கந்தசாமி குறிப்பிட்டார்.

தும்பளை கிழக்கு சனசமூக நிலையத்தலைவரும் நோர்வே தும்பளை அபிவிருத்தி மன்ற இயக்குநர் சபைச் செயலாளருமான திரு பொ, கதிரவேற்பிள்ளை தலைமையில் நடைபெற்ற இவ்விழாவிலே தொடர்ந்து உரையாற்றிய திரு. கந்தசமி குறிப்பிட்டதாவது இன்றைய சிறுவர்கள் தான் எதிர்காலத்தில் : இந்நாட்டை வழிநடத்திச் செல்லும் தலைவர்களாவர் எனவே சிறுவர்களின் சகலநடவடிக்கைகளையும் மேம்படுத்துவதற்கு வேண்டிய வழி முறைகளைநாம் மேற்கொள்ள வேண்டும்.

பாலர் பாடசாலைகளின் வளர்ச்சியிலும் முன்னேற்றத்திலும் தான் சிறுவர்களின் எதிர்காலம் தங்கியுள்ளது இளம் பராயத்திலிருந்தே சிறுவர்களைப் பண்பாளர்களாகவும் கல்வியறிவில் மேம்பட்டவர்களாகவும் சிறந்த விளையாட்டு வீரர்களாகவும் உருவாக்க வேண்டும்.

விழாவிற்குத் தலைமை வகித்த திரு கதிரவேற்பிள்ளை தனது தலைமையுரையில் குறிப்பிட்டதாவது நமது நாட்டின் அபிவிருத்தி மேம்பாட்டை அடைவதற்கு எதிர்காலத்தில் கல்வியறிவால் மேம்பட்ட பண்பாடுள்ள நற்பிரஜைகள் உருவாக வேண்டும் இதற்குச் சிறுவர்கள் சிறந்த முறையில் வழிநடத்திச் செல்லப்பட வேண்டும். இதற்கான நடவடிக்கைகளை மேற்கொள்ள வேண்டியது எமது தலையாய கடமையாகும்.

விளையாட்டுப் போட்டியில் வெற்றியீட்டியவர்களுக்கான பரிசில்களைக் திருமதி கந்தசாமி வழங்கினர்.

# “பாரதிகண்ட தலைவர்களே எமது நாட்டிற்குத் தேவை”

- உடுப்பிட்டி எம். பி.

[புலோலி]

''பாரதியின் இலட்சியதாகமும், தேசபற்றும, இனவிடுதலை உணர்வும் தான் எமது சமுதாய முன்னேற்றத்திற்கு வழிகாட்டிகள் பாரதி கண்ட தலைவர்களே எமது நாட்டிற்குத் தேவையான தலைவர்களாவர்.''

இவ்வாறு இன்பருட்டிக் கிராம அபிவிருத்திச் சங்கத்தினதும் சனசமூக நிலையத்தினதும் 27-வது ஆண்டு நிறைவு விழாவிலும் பாரதி நூற்றாண்டு விழாவிலும் பிரதம விருந்தினராகக் கலந்துகொண்டு உரையாற்றிய உடுப்பிட்டி எம். பி. த. இராசலிங்கம் குறிப்பிட்டார். அல்வாய் வடக்குக் கிராமோதய சபைத் தலைவரும் நிலையத் தலைவருமான திரு. ந. சிவபாதசுந்தரம் தலைமையில் நடைபெற்ற இவ் விழாவில் தொடர்ந்து உரையாற்றிய எம், பி. திரு. இராசலிங்கம் குறிப்பிட்டதாவது:

''மக்களுக்கு வழிகாட்டிகளாகவும் உதவுபவர்களாகவும் தலைவர்கள் சேவையாற்ற வேண்டும். இனவிடுதலையே சமூகத்திற்கு முக்கியமானது. ஓர் இனம் இன்னேர்இனத்தை அடக்கிஆளுவது கண்டு பாரதி வெகுண்டெழுந்தார். அவரது ஒவ்வொரு மூச்சும் ‘விடுதலை விடுதலை’ என்ற தாரக மந்திரத்தையே இலட்சியமாகக் கொண்டு இயங்கியது

''பாரதியின் கனவை நனவாக்கவேண்டும். இதற்கு நம்முள் ஒற்றுமை வேண்டும். பாரதி பாடல்களை நாம் படித்துவிட்டால் மட்டும் போதாது. அவர் காட்டிய வழி நின்று செயற்பட்டால் நிச்சயம் எமது இலட்சியத்தில் வெற்றியடைவோம்.

''சமுதாய முன்னேற்றத்திற்குப் பாரதியின் பாடல்கள் வித்திட்டன. பாரதி வறுமையில் உழன்றபோதும் தனது இலட்சியத்திலிருந்து விலகிவிடவில்லை. பாரதியின் இலட்சிய வாழ்க்கையை நாமும் பின்பற்றவேண்டும்'' என்ருர்.

விழாவிற்குத் தலைமை வகித்த திரு. சிவபாதசுந்தரம் தமது தலைமையுரையில், ‘கிராமிய அபிவிருத்தி அக்கிராம மக்களின் ஒற்றுமையிலேயே தங்கியுள்ளது. மேடைகளில் பேசிவிட்டு வீரராய்த் திகழாமல் செயலில் இறங்கிச் செயல்வீரராகத் திகழ வேண்டும். தமிழினத்திற்கு விடுதலை கிடைக்க வேண்டும்’ என்ருர்

யாழ். மாவட்டசபை உறுப்பினர் திரு தம்பிமுத்து உரையாற்றுகையில், ‘தமிழ் மக்கள் மத்தியில் பிளவுகளை ஏற்படுத்தப் பல தீயசக்திகள் சூழ்ச்சிகளை மேற்கொள்கின்றன இத்தீய சக்திகளின் சூழ்ச்சி வலைகுள் சிக்கிவிடாமல் நாம் சிந்தித்துச் செயற்பட வேண்டும். அப்போது தான் எமது இன்னல்கள் நீங்கி விடிவு கிடைக்கும் என்ருர்.

விசேடசேவை உத்தியோகத்தர் திரு. ஆர். இராசேந்திரமும் பேசினர்.

# திடீர்ப் பரிசோதனை

[கரவெட்டி]

கல்வி அமைச்சின் பிராந்தியக் கல்விப் பணிப்பாளர் திரு. கே. சிவநாதன் தலைமையிலான உயர் அதிகாரிகளைக் கொண்ட குழு கடந்த வாரம் வவுனியா மாவட்டத்தில் திடீர் பரிசோதனைகளை மேற்கொண்டது.

வவுனியா கல்வித் திணைக்களம், வட்டாரக் கல்வி அதிகாரி அலுவலகங்கள், பாடசாலைகள் ஆகியவற்றில் திடீர் பரிசோதனைகளை நடத்திய இப்பரிசோதனைக்குழு மாணவர்களின் கல்விப் போதனைகள் ஆசிரியரின் வரவு ஒழுங்குகள் பற்றி முக்கியமாக ஆராய்ந்ததுடன் கல்விச் சீர்திருத்தம்பற்றிய வழிகாட்டல்பற்றியும் விளக்கமாக எடுத்துக்கூறியது.

பிரஸ்தாப குழு அடுத்த வாரம் முல்லைத்தீவு மாவட்டத்திலுள்ள பாடசாலைகளில் திடீர் பரிசோதனைகளை மேற்கொள்ளவுள்ளது.

# பதில் நீதிபதி

(யாழ்ப்பாணம்)

மல்லாகம் மாவட்ட நீதிபதியாக சட்டத்தரணி திரு. கே. குணரத்தினம் கடமையாற்றுகிருர். நீதிபதி திரு. சி வி. விக்கினேஸ்வரன் தனது தாயார் இறந்ததனுல் அவர் லீவில் சென்றதைத் தொடர்ந்து திரு. கே குணரத்தினம் பதில் நீதிபதியாகக் கடமையாற்றுகிருர். (மா)

# "பனம்பொருள் விருத்தியே எனது ஒரே குறிக்கோள்! அரசியல் சேறு வேண்டாம்!"

-- சபைத் தலைவர் நடராசா

(யாழ்ப்பாணம்)

''அரசாங்க சபைகள் மற்றும் கூட்டுத்தாபனத் தலைவர்களுக்கு, அரசியலில், தேர்தல் நடவடிக்கைகளில் பங்கு பற்றுவதற்கு உரிமைஇல்லை இதனை உணராது என்னை அரசியலோடு சம்பந்தப்படுத்தும் விதத்தில் வேண்டுமென்றே என்மீது அரசியல் சேறு பூசி, பொதுமக்கள் மத்தியில் தவறான அபிப்பிராயத்தை ஏற்படுத்தக் கூடிய விதத்தில் சில சக்திகள் திட்டமிட்டுச் செயலாற்றி வருகின்றன. எனக்கு வழங்கப்பட்டிருக்கும் பொறுப்பை கண்ணியமாக நிறைவேற்றி, எனது சமூக, இனமுன்னேற்றத்துக்கு மட்டுமன்றி, நாட்டின் பொருளாதாரத்திலும் ஒரு மறுமலர்ச்சியை ஏற்படுத்துவதுதான் எனது ஒரேநோக்கம்''.

இவ்வாறு பனம்பொருள் அபிவிருத்திச் சபைத் தலைவர் திரு. க. நடராசா, 1983ம் ஆண்டுக்கான பனம்பொருள் அபிவிருத்தித்திட்டங்கள் சம்பந்தமாக, தெங்கு பனம்பொருள் உற்பத்தி விற்பனை கூட்டுறவுச் சங்கங்களின் சமாஜக் கூட்டத்தில் பேசுகையில் கூறினார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:

''வடபகுதிப் பொருளாதாரத்தில் பனைவளம் மிகவும் இன்றியமையாததாக விளங்குகிறது. பனம்பொருள் அபிவிருத்திச் சபையின் அபிவிருத்தித் திட்டங்களுக்குத் தமிழ்ப்பகுதிப் பாராளுமன்ற உறுப்பினர்கள் சகலரதும் உதவிகளையும், ஒத்துழைப்பையும் பெற்றுள்ளதுடன், சமீபத்தில் ஜனாதிபதி திரு ஜே ஆர். ஜெயவர்த்தனவையும் சந்தித்து பேச்சுவார்த்தைகள் நடத்தியுள்ளேன். பனம்பொருள் அபிவிருத்தியின் மேம்பாட்டுக்காகஉழைப்பதொன்றைத்தான் குறிக்கோளாகக் கொண்டு இயங்கி வருகின்றேன். இப்பாதையிலிருந்து நான் விலகப்போவதில்லை'' என்றும் கூறினார்.

## குட்டிமணி...

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

சமர்ப்பித்தார். அக்கோரிக்கையில் தெரிவிக்கப்பட்டிருப்பதாவது:

''குட்டிமணி, ஜெகன் ஆகியோரை நீதிமன்றம குற்றவாளியாகக் கண்டுள்ளது. ஆனால் அவ்வாறு காண்பதற்கு காரணம் என்ன என்பதை நாம் ஆராயவேண்டும். அவர்களிடமிருந்து பெறப்பட்ட ஒப்புதல் வாக்குமூலங்களே அவர்களைக் குற்றவாளிகளாகக் காண உதவியுள்ளது ஆனால் அந்த ஒப்புதல் வாக்குமூலங்களை நீதிமன்றம் நிராகரித்திருந்தால் அவர்கள் விடுதலை பெற்றிருக்கலாம். அந்த ஒப்புதல் வாக்குமூலங்கள் என்ன சூழ்நிலையில் பெறப்பட்டது. என்பது எவருக்கும்தெரியாது. இந்தச் சூழ்நிலையில் அவர்களை விடுதலை செய்ய நீங்கள் நடவடிக்கை எடுக்கவேண்டு மன கோருகின்றோம்''

## பார்சல் புரளி

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

வெடிக்கவைக்கப்பட்ட போது, அது ஒரு போலிப் பார்சல் என்று கண்டுபிடிக்கப்பட்டது.

அதற்குள் கருங்கல்லும் உமியுமே இருந்தது. குருநகர் இராணுவத்தினரும் மாதகல் இராணுவ முகாமைச்சேர்ந்த இராணுவத்தினரும் ஸ்தலத்திற்கு வந்து இந்த பார்சலுக்கு கெற்புதிரி மூலம் தீ வைத்து வெடிக்கவைத்த போது அது வெடிக்கவில்லை.

### மாதகலிலும்...

மாதகல் உபதயால் நிலையத்தில் நேற்றும் காலை மர்மப் பார்சல் ஒன்று கிடக்கக்காணப்பட்டது.

இது பற்றி மேற்படி தபால் நிலைய அதிபர் மேலிடத்திற்கு உடனடியாக அறிவித்திருந்தார்.

## மரண அறிவித்தல்

திரு. A. R. M. இராஜசிங்கம்

யாழ்ப்பாணம் குருநகரைச் சேர்ந்த இராஜசிங்கம் காலமானார். இவர் காலஞ்சென்ற எலிசபெத்தின் கணவரும், நீற்ரு டோறஸ்(யாழ் மாநகரசபை), டொறத்தி, பெனடிக்ரா, அன்ரன் (கனடா), வண. பிதா அல்பன் அ ம.தி. (வவுனியா), யூஸ்ரஸ் (கொழும்பு ஏஜன்ஸி) ஆகியோரது அன்புத் தந்தையும், மரியநாயகம (ஆசிரியர் கல்முனை), நீற்ரு (ஆசிரியை யாழ்.சென்.ஜேம்ஸ் மகாவித்தியாலயம), மனுவல் (இலங்கைவங்கி), ருஜினி (கனடா), பெனடிக்ற் விளையாட்டுஉத்தியோகத்தர், சந்திரா ஆகியோரது மாமனாருமாவார். அன்னாரது இறுதிச் சடங்குகள் நாளை 5-10-82 செவ்வாய் மாலை 4 மணிககு இடம்பெறும். 19, சென். ஜேம்ஸ் வீதி, யாழ்ப்பாணம. 4738

## மரண அறிவித்தல்

காந்தரட்னம் மனோகரகுமார்

காந்தரட்னம் மனோகரகுமார் காலமானார். இவர் காலஞ்சென்ற காந்தரட்னம், திருமதி லீலா காந்தரட்னம் ஆகியோரின் மகனும், தேவிவிமலாவின் அன்புக் கணவரும், சுரேந்திரகுமார், காலஞ்சென்ற டொனல் கணேசகுமார், திருக்குமார், சாந்திகுமார், சாலெட் ஆகியோரின் சகோதரரும், காலஞ்சென்ற ஆறுமுகம், திருமதி ஆறுமுகம் ஆகியோரின் மருமகனும், பாலகாந்தன், சுசீலகாந்தன், தயாளகாந்தன், குணாளகாந்தன், வதனி ஆகியோரின் மைத்துனரும் ஆவார். அன்னாரது பூதவுடல் யாழ்ப்பாணம் நாவலம் குறுக்குத்தெரு 54-ம் இலக்க இல்லத்திலிருந்து 4-10-82 (இன்று) பி ப. 4-00 மணிக்கு யாழ்ப்பாணம் பண்ணை வீதிச் சேமக்காலைக்கு நல்லடக்கத்திற்காக எடுத்துச் செல்லப்படும். 4737

மட்டக்களப்பில்

## குமாருக்கு வரவேற்பு

(மட்டக்களப்பு)

கல்முனை, பொத்துவில், சம்மாந்துறை ஆகிய தொகுதிகளில் தேர்தல் பிரசாரகூட்டங்களில் கலந்து கொண்ட பின்னர் மட்டக்களப்புமாவட்டத்திற்கு வருகை தந்த தமிழ் காங்கிரஸ்கட்சி பொதுச்செயலாளரும், ஜனாதிபதி வேட்பாளருமான திரு குமார் பொன்னம்பலத்திற்கு மட்டக்களப்பில் வரவேற்பளிக்கப்பட்டது.

இதனையடுத்து மட்டக்களப்பு மாவட்டத்திலுள்ள கூட்டணிப் பிரமுகர்களை சந்தித்து தமக்கு ஆதரவு தருமாறு திரு. குமார் பொன்னம்பலம் வேண்டுகோள்விடுத்துள்ளார்

மட்டக்களப்பு மாவட்ட சபைத் தலைவர் திரு. எஸ். சம்பந்தமூர்த்தியை அவரின் இல்லத்தில் சந்தித்து உரையாடியதுடன் கல்குடாத் தொகுதியின் கூட்டணி முக்கிய பிரமுகர்கள் பலரையும் அவர் சந்தித்தார். க]

## குளிர்காலக் கூட்டத் தொடர்

[புதுடில்லி]

இந்திய பாராளுமன்றத்தின் குளிர்கால கூட்டத்தொடர் இன்று ஆரம்பமாகவுள்ளது. [வெ]

## 99.5 வீதமான...

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

தொடர்ந்தும் அவ்வாறுசெயல்புரிய என்னை ஜனாதிபதியாகத் தெரிவு செய்து அதன் மூலம் சந்தர்ப்பம் தாருங்கள்''

இவ்வாறு காங்கேசன் துறை பஸ்நிலைய மைதானத்தில் நேற்று நண்பகல் நடைபெற்ற ஜனாதிபதி தேர்தல் பிரசார கூட்டத்தில் உரையாற்றிய ஜனாதிபதி ஜே. ஆர். ஜெயவர்த்தன தெரிவித்தார்.

காங்கேசன்துறை யங்ரேயல் விளையாட்டு கழக மைதானத்தில் வந்திறங்கிய ஜனாதிபதி மேற்படி கூட்டத்தில் கலந்துகொண்டு பேசினார் நீண்டகால ஐ. தே. க. ஆதரவாளரும் தொழிற்சங்க பிரமுகருமான திரு. வ, சிவபாலசிங்கம் கூட்டத்திற்கு தலைமைவகித்தார். ஜனாதிபதி மேலும் கூறியதாவது:

ஜனாதிபதி தேர்தலை முன்னிட்டு தமிழ் மக்களைக் காண வந்துள்ளேன். சென்ற இடமெல்லாம் பெருவரவேற்பு கிடைத்துள்ளது.

உங்களது வாக்குகளை வீணாக்காமல் எனக்கு உதவி செய்யுங்கள் நான்உங்களுக்குஉதவி செய்வேன். யாழ், மக்கள் அபிவிருத்தியையே முக்கிய குறிக்கோளாகக் கொண்டுள்ளனர்.

சிறப்பாக வாழ திட்டங்களை செயல்படுத்தி வருகிறேன். தொடங்கிய திட்டங்களை தொடர்ந்து நிறைவேற்ற வாய்ப்பளியுங்கள். இதற்கு வடபகுதி எம். பி க்களின் உதவியையும் ஒத்துழைப்பையும் கேட்கின்றேன். அவர்களுடன் மாவட்டஅபிவிருத்தி சபைகளை எவ்வாறு திறம்பட இயக்கலாம் என்பது பற்றி ஆராய்ந்துவருகிறேன். வடபகுதி எம். பி க்கள் இந்த அபிவிருத்தி சபைகளுக்கு நல்ல ஒத்துழைப்பு நல்கியுள்ளார்கள். இவ்விடயத்தில் நாமும் அவர்களும் ஒருமித்து வருகிறோம்'' என்றார்.

கடற்றொழில் அமைச்சர் பெஸ்டஸ் பெரேரா, பாதுகாப்பு அமைச்சர் வேரப்பட்டிய. யாழ். மாவட்ட அமைச்சர் யு பி. விஜயக்கோன் ஐ. தே. க பிரமுகர் ஆர். ஆர். நல்லையா ஆகியோரும் கலந்து கொண்டனர். பெருந்திரளான மக்களும் குழுமியிருந்தனர்.

## இப்படியும் நடக்கிறது

பாடசாலை பகிஷ்கரிப்பு, முழு வேகத்தில் நடந்த நேரம் அது!

மாணவர்கள் வரவில்லை. கல்லூரி ஆசிரியர்கள் நிரம்பி வழிந்தனர்.

ஆனாலும் நேரம் அவர்களைச் சுட்டெரிக்கவில்லை.

''வீடியோ' வில் இரண்டு தமிழ்ப்படங்களைப் பார்த்து நேரத்தைச் சமாளித்து விட்டனர்!

'ஊடுருவி'

## மகாவலி...

(8-ம் பக்கம் பார்க்க)

உங்கள் பாராளுமன்ற உறுப்பினர்களும் என்னை வருமாறு அழைக்கவுமில்லை; வரவேற்கவுமில்லை. இப்பொழுது கூட [illegible] வரவழைக்கவில்லை ஜனாதிபதி தேர்தல் விஷயமாக உங்களிடம் நானே [illegible]'' என்றார்.

### துப்பாக்கிகளை ஏந்தாதீர்கள்

''இந்நாடு ஜனநாயக நாடு. விரும்பியவர்களுக்கு நீங்கள் வாக்களியுங்கள். ஆனால் துப்பாக்கிகளை ஏந்தாதீர்கள்.

### இவர்களுக்குத் தண்டனை பிழையில்லை

''நாடு அமைதியான நிலையில் இருக்கும் பொழுது ஏன் குழப்பத்தை ஏற்படுத்துகிறீர்கள்? சட்டத்தை மீறுபவர்களை சிறையில் தள்ளுவது பிழையான விஷயமலல: நீதிமன்றம்தான் சட்டத்தை மீறுபவர்களுக்குத்தண்டனை விதிக்கிறது.

### வடபகுதி எம். பி.க்களின்றி ஆட்சிசெலுத்தலாம்

வடபகுதியிலுள்ள உறுப்பினர்கள் இல்லாமலே எங்களால் ஆட்சி செலுத்தமுடியும். அவ்வளவு பெரும்பான்மைப்பலத்துடன் நாம் இருக்கின்றோம்.

### எம். பி.க்கள் இல்லாத கவலை

''ஒவ்வொரு மாதமும் உங்கள் பிரச்னைகள் குறித்து உங்கள் பாராளுமன்ற உறுப்பினர்கள் என்னுடன் கூடி ஆராய்கின்றனர், என்னை நீங்கள் அழைத்துவரவேற்றாலென்ன'' என்று கேட்ட ஜனாதிபதி, தேர்தல் வந்ததால் உங்களிடம் வாக்குக் கேட்டு வந்திருக்கிறேன்; ஆனால் என்னுடன் உங்கள் பிரச்னைகள் குறித் பேச்சுவார்த்தை நடத்த வரு உங்கள்பாராளுமன்ற உறுப்பினர்களை இங்கு காணவில்லை'' என்று கவலை தெரிவித்தார்.

யாழ்ப்பாணம், சுன்னாகம் ஆகிய இடங்களில்வன்முறைச் சம்பவங்களுக்குக் காரணமாக [illegible]ந்தவர்கள் மீது வழக்குகள் தொடரப்பட்டுள்ளதென்றும், விசாரணைக்குழுவொன்று நியமித்து அழிவுகளை மதிப்பீடு செய்து நிவாரணம் வழங்கியுள்ளதாகவும், குறிப்பாக யாழ். பொதுஜன நூலகத்தை புனரமைக்க ஜனாதிபதி நிதியிலிருந்து [illegible] நிதி ஒதுக்கீடு செய்ததாகவும் தெரிவித்த ஜனாதிபதி, அழிந்த நூல் நிலையத்தைத் திரும்பப் பெற்றுக் கொள்ளலாம்; சந்தைக்கட்டிடங்களையும் திரும்பக்கட்டிக் கொள்ளலாம்; உயிரிழந்த பொலிசாரின் உயிரை மீளப் பெறமுடியுமா? என்று கேட்டார்.

### எதையும் எதிர்த்துப் பெறமுடியாது

''யாழ். மாவட்ட எம்.பிக்கள் ஒவ்வொருவருக்கும் ஒவ்வொருவருக்கும் ஒவ்வொரு வருடமும் அவர்களின் தொகுதி அபிவிருத்தி வேலைகளுக்கு 25 லட்சம் ரூபா வீதம் வழங்கிவருகின்றோம். ஜனாதிபதியைத் தெரிவுசெய்யாவிட்டால் இந்த அபிவிருத்தி நிதியைப் பெறமுடியுமா? ஒரு மனிதன் எதையும் எதிர்த்துப் பெறமுடியாது'' என்று திரு. ஜெயவர்த்தன சொன்னார்.

## முதலிடம்

[யாழ்ப்பாணம்]

பத்தொன்பது பதினேழு வயதுகட்குட்பட்ட ஸ்கந்தவரோதயக் கல்லூரியின் இரு எல்லே குழுக்களும் வட மாகாணத்தில் முதலிடம் பெற்றுள்ளன.


## ஹோம் பிறின்ஸ் லிமிட்

(யாழ்ப்பாணம்)

யாழ். புடவை வியாபாரிகளுக்கு ஓர் வரப்பிரசாதம்

ஹோம் பிறின்ஸ் லிமிட், 82, கன்னாதிட்டி வீதியிலுள்ள ஹோம் பிறின்ஸ் ஸ்தாபனத்தில் பூகொடை ஆலை புடவை வகைகள் மொத்த விற்பனைககு உண்டு.

I. சாயமூட்டிய பொப்பிளின்

II. வெள்ளை பொப்பிளின்

விபரங்களுக்கு தொடர்புகொள்ளவேண்டிய முகவரி:

ஹோம் பிறின்ஸ் லிமிட்

82, கன்னாதிட்டி வீதி,

யாழ்ப்பாணம். (போன்: 24310)

தலைமைக் காரியாலயம்

ஹோம் பிறின்ஸ் லிமிட்

463, காலி வீதி, கொழும்பு-3


இப்பத்திரிகை 'ஈழநாடு' லிமிட்டெட் ஸ்தாபனத்தாரால் யாழ்ப்பாணம் சிவன்கோவில் மேற்கு வீதி, 63-ம் இலக்க அச்சகத்தில் 1982-ம் ஆண்டு அக்டோபர் மாதம் 4-ம் திகதி அச்சிட்டு வெளியிடப்பட்டது. Registered as a News Paper at the General Post Office Sri Lanka. under numbre .B. 100236/81. Eelanaadu - P. O. Box: 49. Telegram: Eelanaadu, Telephone: 22389 — 24126.